Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 37 இதழ் - 12 டிசம்பர் - 2024

தனிப்பிரதி
ரூ.10/-



## நவம்பர் 23,24 ஆகிய தேதிகளில் ஈரோடு மாவட்டம் காஞ்சி கோவில் மற்றும் திருப்பத்தூரில் நடந்த இலவச மருத்துவ முகாம்களின் போது....










## ஆசானின் அறிவுரையிலே ...


1. நிறுவன ஆசிரியர் உரை 3
2. சபை கூடி வருதல் 11
3. பெண்கள் பகுதி 14
4. வாலிபர் பகுதி 18
5. சிறுவர் பகுதி 21
6. தேவனாலே நற்செய்தி... 22
7. பிதாவே நாட்களை எண்ணும்... 25
8. எபிரெயர் 1ஆம் அதிகாரம்... 30

THIRUMARAI AASAAN
S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385
Pleading for the restoration of pure New Testament Christianity
Vol. 37 December - 2024 Issue - 12

ஆசிரியர் உரை

# ஜெயம் கொள்ளுகிறவன்

சர்வ வல்லவரின் பெரிதான இரக்கத்தால் கடந்து கொண்டிருக்கும் இந்த ஆண்டில் எதிர்கொண்ட மேடு, பள்ளங்களை தேவதயவால் கடந்து வந்த நாம், எஞ்சியுள்ள சில நாட்களையும் சுகத்தோடும், பெலத்தோடும், பாதுகாப்போடும் கழித்து புதிய ஆண்டுக்குள்ளாகப் பிரவேசிப்பதற்கு ஆசையோடும், நம்பிக்கையோடும் காத்துக் கொண்டிருக்கிறோம். இந்த வேளையில், முடிந்து கொண்டிருக்கும் இந்த ஆண்டின் காரியங்களை நாம் அப்படியே எண்ணிப் பார்க்கும்போது, கலவையான மனநிலை நம் மனக்கண்களுக்கு முன்பாக வந்து நிற்கும். ஆம், எல்லா வகையிலும் வெற்றியாக இருக்க வேண்டுமென்ற கனவோடும், நேர்மறையான எண்ண ஓட்டத்தோடும் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆண்டு அப்படியாகச் சித்தியடையவில்லையே என்று எண்ணுகிறவர்களாகவே இருப்போம். பொதுவான இம்மனநிலைக்கு விதிவிலக்கு என்று பெரிதாக யாரும் இருக்க வாய்ப்புக்கள் மிகக் குறைவே.

நான் மேலே பயன்படுத்தியுள்ள **ஜெயம்**, **வெற்றி**, **சித்தி** என்னும் இவ்வார்த்தைகள் ஒரே பொருளைத் தரும் வெவ்வேறு வார்த்தைகள். இதில் **ஜெயம்** என்பது இரவலாக வாங்கப்பட்ட வார்த்தையாக இருந்தாலும், சுத்த தமிழ்ச்சொல் போன்று புழக்கத்தில் வந்துவிட்ட ஒன்று. **சித்தி** என்பதின் பொருள் பலருக்குப் பெரிதாகத் தெரியாததால் வழக்கத்திலில்லாத ஒரு சொல்லாக மாறிவிட்டது. இம்மூன்று வார்த்தைகளுள், பரிசுத்த வேதாகமத்தைத் தமிழில் மொழி பெயர்த்த சான்றோர்கள், வெளிப்படுத்தல் நூலில் **ஜெயம்** என்னும் வார்த்தையை பயன்படுத்தியுள்ளனர். குறிப்பாக, நம் இரட்சகர் இயேசு ஆண்டவரால், யோவானைக் கொண்டு நற்செய்திப் பூமியாகிய சின்ன ஆசியாவிலிருந்த ஏழு சபைகளுக்கு எழுதப்பட்ட நிருபங்களில் இவ்வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. "ஜெயங் கொள்கிறவனெவனோ" "ஜெயங்கொள்கிறவன்", "ஜெயங்

கொள்ளுகிறவனுக்கு," "ஜெயங்கொண்டு முடிவுபரியந்தம் என் கிரியைகளைக் கைக்கொள்ளுகிறவனெவனோ," "ஜெயங் கொள்ளுகிறவனெவனோ" [2], "ஜெயங்கொண்டு" என்று. **ஜெயம் கொள்கிறவன்** என்பதின் பொருள் **ஒரு கடினச் சூழலை அல்லது எதிர்கொள்ள நேரிடும் ஒரு பெரும் சவாலை நம்பிக்கையோடு அணுகி போராடி மேற்கொள்வது**. இந்தப் பொருளோடு தான் இவ்வார்த்தை **வெளிப்படுத்தல் நூலில்** பயன்படுத்தப்பட்டுள்ளது.

சரி, இப்பொழுது நமது வழக்கத்தின்படி இந்த **ஏழு நிருபங்கள்** இயேசுவால் யோவானைக் கொண்டு எழுதப்பட்டதற்கான பின்னணி பற்றிப் பார்த்து விடுவோம்.

அநேகராகிய நாம் அறிந்துள்ளபடி, ஒட்டுமொத்த வேதாகமத்தின் கடைசி நூல் வெளிப்படுத்தின விசேஷம். ஏனைய காரியங்களோடு, மரித்து உயிர்த்துப் பரலோகம் சென்ற இயேசு தாம் விட்டுச் சென்ற தம்முடைய சீடர்கள் மீது கொண்டிருந்த அன்பை இந்நூல் வெளிப்படுத்துகிறது. இன்றைய துருக்கி நாட்டிலும், அன்றைய ஆசிய மைனரிலுமிருந்த **ஏழு சபைகளுக்கு இந்த ஏழு நிருபங்கள்** யோவானைக் கொண்டு வெளிப்படுத்தி எழுதப்பட்டுள்ளது. அன்றைய ரோம அரசாங்கத்தின் கீழ் கடும் துன்பத்துக்கும், பெரும் உபத்திரவத்திற்கும் உள்ளாகியிருந்த கிறிஸ்தவர்களுக்கு நம்பிக்கையூட்டும்படியாக இந்நூல் எழுதப்பட்டது.

அந்நாட்களிலிருந்த கிறிஸ்தவர்களுக்கு இந்நிருபங்களின் செய்தி மிகவும் அவசியமாயிருந்தது. அப்போது இயேசு உயிரோடே எழுந்து, பரமேறி ஓர் ஐம்பது ஆண்டுகள் கிட்டதட்ட நிறைவடைந்து விட்டது. இயேசுவின் பிரதான கட்டளைப்படி இயேசுவின் நற்செய்தியை அவருடைய சீடர்களும், அவரைப் பின்பற்றினவர்களும் பெரும் சவால்களுக்கு மத்தியில் பிரசங்கித்து சபைகளை ஏற்படுத்தி வந்தனர். ஆயினும், **நீரோ மன்னன் ஆட்சியின் கீழ்** அச்சுறுத்தலும், அடக்குமுறையும் அதிகரிக்கத் தொடங்கிவிட்டது. குறிப்பாக, கி.பி 64 ஜூலை 19–ல் ரோம் நகரம் தீப்பற்றியெரிந்த போது, தன் கையாலாகத் தனத்தை மறைக்க, இப்பெரும் தீங்கிற்குக் **கிறிஸ்தவர்கள் தான் காரணம்** என்று நீரோ மன்னன் **பழிசுமத்தியதால்** கிறிஸ்தவர்களுக்கெதிரான துன்புறுத்தல் வேகமெடுத்தது. அதற்கான இன்னொரு காரணம், கிறிஸ்தவர்கள் **சக்கரவர்த்தி வணக்கத்தை** ஏற்க மறுத்தது. இத்தனைக்கு மத்தியிலும் கிறிஸ்தவம் தாக்குப்பிடித்து நற்செய்திப் பணியில் தங்களை அர்ப்பணித்தே வந்தது. ஆயினும், கி.பி 81 –ல் சக்கரவர்த்தி டொமிசியன் ஆட்சிக்கட்டில் ஏறியபிறகு, ரோம சாம்ராஜ்ஜியத்தில் கிறிஸ்தவர்கள் **வாழத் தகுதியற்றவர்கள்** என்ற நிலையைக் கொஞ்சம் கொஞ்சமாக ஏற்படுத்தினான். நீரோ சக்ரவர்த்தி மற்றும் அவனைத் தொடர்ந்து வந்த ஆட்சியாளர்களின் காலத்தில்


கண்டும் காணாமலும் விடப்பட்ட சக்கரவர்த்தி வணக்கம் டொமிசியன் ஆட்சியில் தயவு தாட்சண்யமின்றி கட்டாயமாக்கப்பட்டது. இக்கொடிய குழலுக்கு இயேசுவுக்கு அன்பின் சீடனான அப்போஸ்தலன் யோவானும் தப்ப முடியவில்லை. இதினிமித்தம் **ஏஜியன் கடல்** பகுதியிலிருந்த **பத்மு தீவுக்கு** அவன் கடத்தப்பட்டான்.

## பத்மு தீவு






பத்மு தீவு **ஏஜியன் கடலில்** உள்ள ஒரு தீவு. கிரேக்க நாட்டிற்கும், துருக்கி நாட்டிற்கும் இடையேயுள்ள கடற்பரப்பு தான் **ஏஜியன் கடல்** என்று அழைக்கப்படுகிறது. இக்கடலிலுள்ள 12–க்கும் அதிகமான தீவுக் கூட்டங்களில் இதுவும் ஒன்று. அதே ஏஜியன் கடற் பகுதியிலிருந்த சாமு தீவிலிருந்து 22 மைல் தொலைவிலும், மிலேத்துவிலிருந்து 38 மைல் தொலைவிலும் பத்மு தீவு அமைந்துள்ளது. இத்தீவை ஏஜியன் கடல் பகுதியின் **ஆபரணம்** என்றும், **ஏஜியனின் எருசலேம்** என்றும் அழைப்பார்கள். இச்சிறப்புகளுக்கான காரணங்களில் ஒன்று, யோவான் அப்போஸ்தலன் இங்கு சிறை வைக்கப்பட்டதே.




இத்தீவு மொத்தத்தில் சுமார் 50 சதுர மைல் அளவு கொண்டது. இத்தீவின் உயரமான பகுதி கடல் மட்டத்திலிருந்து சுமார் 900 அடி இருக்கும். அதிகமான பாறைகளையும், குன்றுகளையும் கொண்ட ஒரு தீவாகவே உள்ளது. இத்தீவு ஹோரா (Hora), ஸ்காலா (Skala), காம்போஸ் (Compos) என்று மூன்று சிறு நகரங்களை உள்ளடக்கியதாக

தற்போது உள்ளது. இதில் ஸ்காலா என்பதுதான் முக்கியமானது. இப்பகுதியில் சுமார் 500 அடி உயரத்தில் இருந்த ஒரு **பாறை இடுக்கில் தான் யோவான் அப்போஸ்தலன் கி.பி 94 ல், இத்தீவுக்குக் கடத்தப்பட்டு சிறை வைக்கப்பட்டான்.** அந்நாட்களில், இது கொடுங் குற்றவாளிகள் மற்றும் அரசியல் கைதிகள் அடைத்து வைக்கப்படும் ஓர் இடமாக இருந்துள்ளது. அடைத்து வைக்கப்படுவதோடு நிற்காமல் அங்கிருந்த உப்புச் சுரங்கங்களில் பணியாற்றவும் கட்டாயப் படுத்தப்பட்டனர். ரோம ஆட்சியாளர்களின் இச்செயல், நம் இந்தியத் திருநாட்டை ஆங்கிலேயர்கள் ஆட்சி செய்த போது, விடுதலைக்காகப் போரிட்டவர்களை தேசத்துரோகக் குற்றம் சாட்டி **அந்தமான் தீவில்** அடைத்து வைக்கப் பட்டதை நினைவு படுத்துகிறது.



**பத்மு தீவில் யோவான் சிறைவைக்கப்பட்ட கல் குகை**




**பத்மு தீவுக்கு நாங்கள் பயணம் செய்த கப்பல்**

இத்தீவுக்கு கிரேக்க நாட்டின் தலைநகராகிய **அத்தேனே** பட்டணத்திலிருந்து கப்பல் போன்ற படகு மூலம் 7 மணி நேரம் பயணம் செய்து போய்ச் சேர்ந்தோம். இன்றைக்கு இத்தீவுக்கு வருபவர்கள் யோவானைப் போன்று நானும் இங்கே சிறை வைக்கப்பட்டால் நலமாயிருக் குமென்று எண்ணுமளவுக்கு மிக நவீனமாக உள்ளது.


ஆனால், யோவான் நாட்களில் அப்படியிருக்கவில்லை. ஒரு காலத்தில் கிரேக்கர்களின் அதிகாரத்திலிருந்த இத்தீவை கிமு 2–ம் நூற்றாண்டு வாக்கில் ரோமர்கள் தங்கள் ஆளுகையின் கீழ் கொண்டு வந்த போது பூர்வக் குடிகள் இங்கிருந்து ஓடி விட்டனர். அதுமுதல் ஆள் அரவமற்ற ஒரு தீவாகவே இது இருந்துள்ளது. இத்தீவில்

கிரேக்கர்களால் ஆர்டமிஸ் (Artemis) என்றும், ரோமர்களால் தியானாள் (Diana) என்றழைக்கப்படும் தேவதைக்கு ஒரு கோயில் உள்ளது.

**யோவான் கண்ட தரிசனம்.**

ரோம சாம்ராஜ்ஜியத்தில் ஏராளமாயிருந்த விக்கிரகங்களை வணங்க மறுத்து, சக்கரவர்த்தி வணக்கத்திற்கும் எதிர்ப்புத் தெரிவித்து, அத்தோடு நற்செய்தி அறிவிப்பதையும் நிறுத்தாத காரணத்தால் டொமிஷியனின் 14 ம் வருட ஆட்சிக் காலத்தில் கி.பி 94 –ம் ஆண்டு வாக்கில் **பத்மு தீவுக்கு** யோவான் கடத்தப்பட்டான்.

அப்படி இத்தீவிலிருந்த போது தான் யோவானுக்கு இயேசு ஆண்டவரின் தரிசனம் கிடைத்தது. **உங்கள் சகோதரனும், இயேசுகிறிஸ்து விநிமித்தம் வருகிற உபத்திரவத்திற்கும், அவருடைய ராஜ்யத்திற்கும் அவருடைய பொறுமைக்கும் உங்கள் உடன் பங்காளனுமாயிருக்கிற யோவானாகிய நான் தேவ வசனத்தினிமித்தமும், இயேசுகிறிஸ்துவைப் பற்றிய சாட்சியினிமித்தமும் பத்மு என்னும் தீவிலே இருந்தேன். கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானேன், அப்பொழுது எனக்குப் பின்னாலே எக்காளசத்தம் போன்ற பெரிதான ஒரு சத்தத்தைக் கேட்டேன். அது நான் அல்பாவும், ஓமெகாவும், முந்தினவரும், பிந்தினவருமாயிருக்கிறேன். நீ காண்கிறதை ஒரு புஸ்தகத்தில் எழுதி, ஆசியாவிலிருக்கிற எபேசு, சிமிர்னா, பெர்கமு, தியத்தீரா, சர்தை, பிலதெல்பியா, லவோதிக்கேயா என்னும் பட்டணங்களிலுள்ள ஏழு சபைகளுக்கும் அனுப்பு என்று விளம்பினது** (வெளி 1:9–11).



**தியானாள் தேவதை**

அப்பொழுது என்னுடனே பேசின சத்தத்தைப் **பார்க்கத் திரும்பினான்**. அப்படித் திரும்பினபோது, **அவன் கண்ட காட்சி பயங்கரமாக இருந்தது**. இயேசுவோடு மூன்றரை ஆண்டுகள் சுற்றித் திரிந்து அவருக்கு அன்பான சீஷனாக இருந்த போது, கண்ணில் பார்த்த இயேசுவுக்கும், இப்பொழுது தரிசனத்தின் மூலம் காண்கிற காட்சிக்கும் எவ்வித சம்பந்தமும் இருக்கவில்லை.



**சக்கரவர்த்தி டொமிஷியன்**

ஆம், 1. ஏழு பொன் குத்துவிளக்குகளையும், 2. அந்த ஏழு பொன் குத்துவிளக்குகளின் மத்தியிலே வெள்ளையங்கி தரித்தும், 3 மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்த மனுஷகுமாரனுக் கொப்பானவரும், சிரசும், மயிரும் வெண் பஞ்சைப்போலவும், உறைந்த மழையைப் போலவும் வெண்மையாயிருந்தவரும். 5. கண்கள் அக்கினி ஜுவாலை போலிருந்தவர் பாதங்கள் உலைக்களத்தில் காய்ந்த பிரகாசமான வெண்கலம் போன்றவர், 7. சத்தம் பெருவெள்ளத்து இரைச்சல் போலுமிருந்தது. 8 வலது கரத்தில் ஏழு நட்சத்திரங்களை ஏந்திக் கொண்டிருந்தார். 9. வாயிலிருந்து இருபுறம் சுருக்குள்ள பட்டயம் புறப்பட்டது, 10. முகம் வல்லமையாய்ப் பிரகாசிக்கிற சூரியனைப் போலிருந்தது. யோவான் இந்தக் காட்சியைக் கண்டபோது, **செத்தவனைப் போல்** இயேசுவின் பாதத்தில் விழுந்தான்.

இயேசுவுடனான தன்னுடைய மூன்றரை ஆண்டு கால ஊழிய அனுபவத்தில் இப்படியொரு இயேசுவை யோவான் கண்டதேயில்லை.

1. என் பின்னே வாருங்கள், நான் உங்களை மனிதரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்று அழைத்த இயேசுவை யோவான் அறிவான்.
2. கலிலேயக் கடலில் வலை கிழியத்தக்கதாக மீன்களைப் பிடித்த போது கண்ட இயேசுவைத் தெரியும்.
3. அதிகாரத்தோடு ஜனங்களுக்கு பிரசங்கித்த இயேசுவை அறிவான்
4. அசுத்த ஆவிகளை விரட்டிய இயேசுவை அறிவான்
5. வார்த்தையின் வல்லமையால் அற்புதங்கள் செய்த இயேசுவை அறிவான்
6. மரித்தவர்களை உயிரோடு எழுப்பின இயேசுவை அறிவான்.
7. தேவாலயத்தைக் கள்ளர் குகையாக்கின கயவர்களை வீறுகொண்டெழுந்து விரட்டிய இயேசுவை அறிவான்
8. தன்னைக் காட்டிக்கொடுத்தவனைச் சிநேகிதனே என்றழைத்த இயேசுவை அறிவான்.
9. பிரதான ஆசாரியர்களால் விசாரிக்கப்பட்ட இயேசுவை அறிவான்
10. சிலுவையிலறையப்பட்ட போது, தாய் மரியாளைத் தன்னிடம் ஒப்படைத்த இயேசுவை அறிவான்.
11. உயிரோடெழுந்து காட்சி தந்த இயேசுவை அறிவான்
12. இன்னும், வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இயேசுவையும் அறிவான்.

ஆனால், தனக்கு தரிசனத்தில் வெளிப்பட்ட இந்த இயேசுவோ முற்றிலும் மாறுபட்டவர். அந்தக் காட்சி, பயந்து நடுங்கும்படியான ஒரு காட்சி. இத்தரிசனம், அன்பின் சீடனாகிய யோவான் வாழ்வில் **ஒரு முக்கியமான கட்டத்தில்** இயேசுவால் கொடுக்கப்பட்டது. இக்காட்சி யோவானுக்கு மட்டுமல்ல, ரோம ஆட்சியின்கீழ் சொல்லொணாத் துன்பங்களை ஆவியிலும், சரீரத்திலும் அனுபவித்துக் கொண்டிருந்த முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களுக்கும் இது அவசியமாயிருந்தது. இத்தரிசனம் கிடைத்தபோது யோவான் நாடுகடத்தப்பட்ட ஒரு கைதியாக பத்மு தீவில் இருந்தான். **அப்பொழுது ஆட்சியிலிருந்த டொமிசியன் திட்டப்படி கிறிஸ்தவர்களுக்கு எதிரான காரியங்கள் அனைத்தும் அப்படியே நடந்து கொண்டிருந்தது**. ஒருவேளை யோவான் இடத்தில் நீங்களும், நானும் இருந்திருந்தால் என்ன எண்ணியிருப்போம்? எல்லாம் முடிந்து விட்டது. இப்படியெல்லாம் நடக்குமென்று நான் கொஞ்சம் கூட நினைத்துப் பார்க்கவில்லை. பிரதான பூமியில் உள்ள ஏனைய கிறிஸ்தவர்கள் எப்படியிருக்கிறார்களோ என்றெல்லாம் புலம்பித் தீர்த்திருப்போம், அப்படித்தானே!

இப்பின்னணியில்தான் இப்படியொரு காட்சி யோவானுக்கு இயேசுவால், வெளிப்படுத்தப்பட்டது. இயேசு ஆண்டவர் ராஜாக்களுக்கும் மேலான இராஜாதி இராஜாவாக, எல்லா அதிகாரங்களுக்கும் மேலான வல்லமை கொண்டவராக இருக்கிறார் என்னும் செய்தி இத்தரிசனத்தின் மூலம் கொடுக்கப்பட்டது. விசுவாசத்தில் நிலைத்திருங்கள், உறுதியாயிருங்கள், எல்லாவற்றையும் மேற்கொண்டு வெற்றி பெறுங்கள். நான் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டுதான் உள்ளேன். இறுதி வெற்றி என் சீடர்களாகிய உங்களுக்குத் தான் என்னும் செய்தி இக்காட்சியின் மூலம் பளிச்சென்று தெரிவிக்கப்பட்டது.

இயேசு இப்படியொரு காட்சியை வெளிப்படுத்தி விட்டுத்தான் 1:19-ல் நீ **கண்டவைகளையும், இருக்கிறவைகளையும், இவைகளுக்குப்பின் சம்பவிப்பவைகளையும் எழுது** என்று கட்டளையிட்டார். அத்தோடு, வசனம் 20-ல், **என் வலது கரத்திலுள்ள ஏழு நட்சத்திரங்களின் இரகசியத்தையும் எழுது என்றார்**. வேதாகமம் பல இடங்களில், **வலது** என்பது, **பலத்திற்கும்**, **வல்லமைக்குமான அடையாளம்** என்று கூறுகிறது. ஆனால், இந்த **ஏழு நட்சத்திரங்களின் இரகசியம் என்ன என்ற கேள்வி இங்கே வருகிறது**. இதற்கும் சரித்திர ரீதியிலான காரணம் இருக்கவே செய்கிறது. கி.பி 81-ல் ஆட்சிக்கு வந்த டொயிசியனின் குழந்தை ஒன்று கி.பி 83-ல் இறந்து போனது. இறந்து போன அந்தக் குழந்தையை அவன் **ஒரு தெய்வமாக மாற்றி**, குழந்தை போன்று சிலை செய்து, அந்தச் சிலையைப் பூமி போன்ற மீது உட்காரவைத்து, அந்தக் **குழந்தையின் நெற்றியில் நட்சத்திரங்களைப்**

**பொறித்து** அந்தக் குழந்தையை **எல்லோரும் வணங்க வேண்டுமென்று** கட்டளை பிறப்பித்தான். ஏனைய ரோமக் குடிகள் எல்லோரும் குழந்தை தெய்வத்தை வணங்கிய நிலையில், ரோம சாம்ராஜ்ஜியத்தில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு இது ஒரு பெரும் சவாலாக இருந்தது. இப்படிப்பட்ட சூழலில், நட்சத்திரங்கள் பொறித்த குழந்தை தெய்வம் பற்றி நீங்கள் அச்சப்பட வேண்டிய அவசியமில்லை. **ஏழு நட்சத்திரங்கள் என் வலது கரத்தில் உண்டு,** அதாவது முழுமையான அதிகாரம் என்னிடமுண்டு. நீங்கள் எச்சூழலிலும் கலங்க வேண்டாம் என்று நம்பிக்கையூட்டி எழுதியுள்ளார்.

வெளிப்படுத்தல் நூலில் யோவானால், ஆசியாவிலிருந்த ஏழு சபைகளுக்கும் இப்படியாக எழுதப்பட்ட நிருபங்கள் ஒவ்வொன்றும் **தனித்தன்மை** கொண்ட **அறிமுகத்தையும், ஜெயங்கொள்ளு கிறவர்களுக்குத் தனித்துவமான பலனும்** வாக்களிக்கப்பட்டிருக்கிறது. ஒருவேளை, எல்லோருக்கும் **முடிவான பலன்** பரலோகமாக இருந்தாலும், அவர்கள் வாழ்ந்த பட்டணங்களில் அவரவர்கள் எதிர்கொண்ட சூழலுக்கும், சவாலுக்கும் ஏற்ப அவர்களுக்கான **அறிமுகமும், பலன்களும்** இயேசுவால் வாக்களிக்கப்பட்டிருப்பதை நாம் கவனிக்கத் தவறக்கூடாது. ஏனெனில், இந்நிருபங்களின் உட்பொருளை உள்வாங்குவதற்கு இது மிகவும் அவசியம்.

ஆசியாவிலிருக்கும் ஏழு சபைகளுக்கும் பொதுவாகச் சொல்லப்பட்டிருக்கும் செய்தி **ஜெயம் கொள்ளுதல்**. ஆம், ஒவ்வொரு கிறிஸ்தவனும் தங்கள் பக்தி வாழ்வில் **ஜெயம் கொள்வது** அவசியம். அன்றைக்கு எப்படி பக்தி வாழ்வில் ஜெயம்கொள்வது அவசியமாயிருந்ததோ, அதுபோலவே இன்றைக்கும் கிறிஸ்தவ வாழ்வில் வெற்றி பெறுவது அவசியமாயிருக்கிறது. கர்த்தருக்குச் சித்தமானால், அப்படி வெற்றி பொறுவதற்கு வரக்கூடிய மாதங்களில் எழு சபைகளுக்கும் எழுதப்பட்ட நிருபங்களைத் **தனித்தனியாக கூடுதல் விபரங்களேடு** படிக்க உள்ளோம்.

அன்பானவர்களே! எதிர்வரும் புதிய ஆண்டு நம் ஒவ்வொருவருக்கும் ஆவியிலும், சரீரத்திலும் ஜெயமாக, வெற்றியாக, சித்தியாக அமைந்து, எதிர்கொள்ள நேரிடும் எல்லாச் சவால்களையும் நாம் விசுவாசத்தோடும், தைரியத்தோடும் சந்தித்து மேற்கொள்ள தேவன் அருள் புரிவாராக! ஆமென்!!

*ஆசான் குடும்பத்தின் சார்பாக அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்! தேவ ஆசீர்வாதம் உங்களனைவரோடும் கூட இருப்பதாக! ஆமென்!!*
– ஆசிரியர்

✝

# சபை கூடி வருதல்

**சகோ. சோட்**

**சென்ற மாத இதழின் தொடர்ச்சி...**

சபை கூடி வருவதில் நாம் பங்கு பெற வேண்டுமென கர்த்தர் எதிர்பார்க்கிறார் என்பதால் தான் இவை அனைத்தையும் நாம் கூறக் காரணமாக இருக்கிறது. அது அலட்சியப்படுத்த முடியாத காரியம். நாம் தவறுவோமானால் அது ஆபத்தான காரியம் கூட. ஆனால், நாம் அவ்வாறு செய்ய வேண்டுமென்று அவர் ஏன் கேட்டிருக்கிறார்? ஏன் சபை கூடி வருவதில் கலந்து கொள்ள வேண்டும்? அதற்குப் பல காரணங்கள் உண்டு. சிலவற்றை நாம் கவனிப்போம்: ஏனென்றால் கட்டளையாலும், முன்னுதாரணத்தாலும் நாம் அவ்வாறு செய்ய வேண்டுமென உபதேசிக்கப்பட்டுள்ளோம். நாம் கூடிவருவதை புறக்கணிக்கலாகாது என ஏற்கனவே எபிரெயர் 10:25ம் வசனத்தில் நாம் எச்சரிக்கப்பட்டுள்ளோம். பின்னர், ஆதிக்கிறிஸ்தவர்கள் எவ்வாறு ஆராதனை செய்யக் கூடினார்கள் என்பதை அப்போஸ்தலர் நடபடி 2:42ம் வசனத்திலும், பவுலும், கிறிஸ்தவர்களும் துரோவா பட்டணத்தில் வாரத்தின் முதல் நாளிலே ஆராதிக்கக் கூடி வந்தது பற்றி அப்போஸ்தலர் நடபடி 20:7ம் வசனத்திலும் நாம் படிக்கிறோம் ஆகவே, நாமும் அவ்வாறு செய்ய வேண்டும்.

2. தேவனை ஆராதிக்க நாம் கூடி வரவேண்டும். உண்மையாகத் தொழுது கொள்ளுபவர்களை தேவன் தேடிக் கொண்டிருக்கிறார் என்றும், தேவன் ஆவியாய் இருப்பதால் நாம் அவரை ஆவியோடும் உண்மையோடும் தொழவேண்டுமென யோவான் 4:23, 24 வசனங்களில் கிறிஸ்து நமக்குக் கூறுகிறார்.

3. கர்த்தரின் பந்தியில் கலந்து கொண்டு அவரை நினைவு கூரத்தக்கதாக நாம் கூடி வருவதை கர்த்தர் ஏற்படுத்தினார். கர்த்தரின் பந்தி ஏற்படுத்தப்பட்டதைப் பற்றி பவுல் கூறும் போது. கிறிஸ்துவின் சரீரத்தின் நினைவாக அப்பத்திலும் கிறிஸ்துவின் இரத்தத்தின் நினைவாக இரசத்திலும் பங்குபெற வேண்டுமென்று எடுத்துக் காட்டுகிறார். [1 கொரி. 11:24-25], கர்த்தரை இவ்வாறு நினைவு கூறவேண்டுமானால், ஒவ்வொரு வாரத்தின் முதல் நாள் தோறும் நாம் கூடி வராவிட்டால் எப்படி அது சாத்தியமாகும்?

4. நமது வரவுக்குத்தக்கதாக கொடுக்கும்படி நாம் கூடி வரவேண்டும். மீண்டுமாக. நாம் 1 கொரிந்தியர் 16 : 2ம் வசனத்திற்குத் திருப்பிக் கொண்டால் வாரத்தின் தல் நாள் நாம் கூடி வந்து நமது வரவுக்கேற்பக் கொடுக்க வேண்டும் என பவுல் கூறுவதைக் காணலாம். நாம் கூடி வராத பட்சத்தில் நமது கொடுத்தலின் நிலை என்ன? நாம்

சுகவீனமாக இருப்பின் அடுத்துவரும் கர்த்தரின் நாளிலே நாம் அதைக் கொண்டுவர முடியும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் கூடி வரத் தவறும் பலர் கொடுக்கும் சந்தர்ப்பத்தை இழந்து போவது மட்டுமல்லாமல் எவ்வித பொறுப்பு உணர்ச்சியும் இன்றி மீண்டும் மீண்டுமாக தொடர்ந்து தவறுகின்றனர்.

5. சபை கூடி வரும்போது நமது மத்தியிலே கர்த்தர் இருப்பதாக வாக்களித்துள்ளார். அவருடைய வாக்குத்தத்தத்தைப் பாருங்கள்: ஏனெனில் இரண்டு பேராவது, மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்'. (மத்தேயு 18:20). சபையின் ஒவ்வொரு ஆராதனையிலும் நாம் பங்கு கொள்ள இது ஒன்றே போதுமான காரணமாக இருக்கிறது. ஏனெனில், கர்த்தர் அங்கிருப்பதாகக் கூறியிருக்கிறாரே. நம் நாட்டு பிரதமர் அல்லது வேறு முக்கியமான ஒரு தலைவர் வரும் இடத்தில் நாம் இருக்க விரும்ப மாட்டோமா? ஆனால் இங்கே ஒரு முறை மட்டுமல்ல, ஒவ்வொரு முறையும் நம்மை சந்திப்பதாக கர்த்தரே கூறியிருக்கிறார். நான் அங்கே இருப்பேன் என அவர் கூறியிருக்கும் போதுஇ நிச்சயமாக எல்லாவற்றிலும் முக்கியமான இந்த சந்திப்பை நாம் தவறவிட விரும்பமாட்டோம்.

6. ஒவ்வொரு சந்திப்பிலும் நாம் தவறாது கலந்து கொண்டு நல்ல முன்னுதாரணத்தை ஏற்படுத்த வேண்டும். நமது குடும்பத்தினர்கள், நம்மை நேசிப்பவர்கள், நண்பர்கள், பொதுவாக உலகத்தின் மக்கள் அனைவரும் நம்மைக் கவனித்துக் கொண்டிருக்கின்றனர். பின்பற்ற வேண்டிய ஒரு எடுத்துக் காட்டாகவும், வழிகாட்டியாகவும் நம்மை அவர்கள் பார்க்கின்றனர். இதை நாம் உணர்ந்து கொண்டு, அவர்களை சரியான திசையில் வழிநடத்த வேண்டும். நீங்கள் நினைப்பதைவிட அவர்களுடைய இரட்சிப்பு நமது செயல்களைப் பொறுத்திருக்கக் கூடும். தெசலோனிக்கேயருக்கு பவுல் எழுதினார். 'நீங்கள் மிகுந்த உபத்திரவத்தியே, பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே, திருவசனத்தைக் ஏற்றுக் கொண்டு எங்களையும் கர்த்தரையும் பின்பற்றுகிறவர்களாகி, இவ்விதமாய் மக்கெதோனியாவிலும், அகாயாவிலுள்ள விசுவாசிகள் யாவருக்கும் மாதிரிகளானீர்கள். (1 தெச. : 6,7) மக்கள் தம்மைப் பின்பற்றும் போது, உண்மையில் கிறிஸ்துவையே அவர்கள் பின்பற்றுகிறார்கள் என்ற ஒரு முன்னுதாரணமாக நாம் செயல்படுகிறோமா? அவ்வாறு நாம் நடக்க வேண்டும். ஒவ்வொரு முறை சபை கூடி வரும் போதும் தவறாமல் நேரத்திற்கு வரவும், அமைதியாக இருக்கவும். பயபக்தியுடனும் கர்த்தரை உண்மையாகத் தொழுது கொள்ளவும் இப்போதே திட்டமிடுங்கள்.

7. ஐக்கியத்திற்காகவும் ஆவிக்குரிய வளர்ச்சிக்காகவும் நாம் கூடி வருவதில் தனிப்பட்ட முறையிலோ, கூட்டாகவோ பங்கு பெற வேண்டும். சபை அங்கத்தினர்கள் ஒரு போதும் கூடிவராவிட்டால், அந்தக் குறிப்பிட்ட பகுதி அல்லது நகரிலே சபையின் நிலைபற்றி என்ன சொல்ல முடியும்? கூடி வராதபட்சத்தில் அங்கத்தினர்கள் ஒருவரையொருவர் அறிந்து கொள்ள முடியாது. அவர்களுடைய விசுவாசத்தின் பலத்தைப் புரிய முடியாது, வேலைளைத் திட்டமிட முடியாது. ஒருவருக்கொருவர் உதவ இயலாது. ஒருவருக்கொருவர் உற்சாகப்படுத்த முடியாது. வேறுவிதமாகச் சொன்னால்இ சபையின் பல வேலைகள் அதின் பலம், அதின் செயல்பாடுகள் போன்ற அனைத்துக் காரியங்களும் சபை கூடி வருவதையே முழுமையாகச் சார்ந்துள்ளது. உண்மையிலே இவை இல்லாது போனால் சபை விரைவில் மடிந்து போகும். எனவே தான், புதிய ஏற்பாட்டில் சபை கூடி வருதலைப் பற்றி இப்போதும் நீங்கள் படிக்கிறீர்கள். எங்கெல்லாம் பவுலும் பிற சகோதரர்களும் சென்றனரோ அங்கெல்லாம் பிராந்திய சபைகளைச் சந்தித்தனர். சபையைத் துன்புறுத்திக் கொண்டிருந்த வேளைகளிலும் கூட சபை உறுப்பினர்கள் சந்திக்க வழிகளையும் சந்தர்ப்பங்களையும் கண்டு கொண்டனர். அது போலவே, நாம் கர்த்தரை ஆராதிக்கவும் அவருடைய பணியைச் செய்யவும் இன்று தொடர்ந்து கூடிவருவது மிகவும் அவசியமாகும்.

மேற்சொன்ன யாவும் சபை கூடி வரும் போது நாம் ஏன் அதில் பங்கு பெற வேண்டும் என்பதற்கான சில காரணங்கள் தான். ஒரு மாதத்திற்கு ஒரு முறை அல்லது எப்போதாவது போனால் போதும் என்ற அடிப்படையில் இல்லாமல் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் அல்லது சபை கூடி வர முடிவு செய்யும் சகல நாட்களிலும் நாம் செல்ல வேண்டும். வேதாகமம் கூறுகிறது, **சபை கூடி வருதலை விட்டு விடலாகாது** என்று. சபை கூடி வரும் எல்லா சந்தர்ப்பங்களையும் இது குறிக்கும். நமது வாழ்வில் ஆராதனைக்கு முதல் இடம் தந்து நாம் அவருக்கு உண்மையாக வாழ்ந்திட நமது கர்த்தர் உதவி செய்வாராக! இந்த வழியில் நாம் அவருக்கு விசுவாசமாக நடந்து கொள்ளும் போது. பிற அனைத்து வழிகளிலும் நாம் அவருக்கு விசுவாசமாக இருப்போம்.

✝

**தேவனுக்கு நன்றி சொல்வதை ஒருபோதும் நிறுத்தாதே!? ....**

**ஏனெனில், அவர் நமக்கு நன்மை செய்வதை ஒருபோதும் நிறுத்துவதில்லை!**

பெண்கள் பகுதி

# தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது எது?

Sis. **ரேச்சல் இராஜநாயகம்**

**எ**ல்லாக் காலத்திலும் மிகவும் சிறந்து விளங்கின பல ஸ்திரீகளில் தெபொராள் ஒருவள். மனைவியாக, தாயாக, தீர்க்கதரிசியாக, நியாயாதிபதியாக, கவிதை எழுதுபவராக, பாடகியாக, போரில் முன் நின்று தலைமையேற்றவளாக இப்படி பல பொறுப்புகளுக்கு மத்தியிலும் தேவனுக்காக வாழ்க்கையை அர்ப்பணித்த ஒரு மாபெரும் ஸ்திரீயாக இன்று நமக்கு முன் நிற்கும் இந்த ஸ்திரீயிடம் புதிய வருடத்தை எதிர்நோக்கியிருக்கும் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் சில பாடங்களைக் கற்றுக் கொள்வோம்.

கானானிய இராஜாவாகிய யாபீன் தொள்ளாயிரம் இருப்பு ரதங் களை வைத்திருந்தான். அவன் இஸ்ரவேல் புத்திரரை இருபது வருடம் கொடுமையாய் ஒடுக்கினான் [நியா. 4:3]. இந்தக் கால கட்டத்தில்தான், தேவன் தன் மக்களை நியாயம் விசாரிப்பதற்காக தெபொராளைத் தெரிந்து கொண்டார். அவள் எப்பிராயீம் மலைத் தேசமான ராமாவுக்கும், பெத்தேலுக்கும் நடுவிலிருக்கிற தெபொராளின் பேரீச்சமரத்தின் கீழே குடியிருந்தாள். அங்கே இஸ்ரவேல் புத்திரர் அவளிடத்திற்கு நியாய விசாரணைக்குப் போவார்கள்.

**தெபொராள் நாட்களின் நிலை :** இஸ்ரவேல் புத்திரர் திரும்பக் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து வந்தார்கள். எனவே, தேவன் அவர்களை அவர்கள் பகைவர் கைக்கு விற்றுப் போட்டார் [நியா. 4:1]. நியாயாதிபதிகள் புத்தகத்தின் கருப்பொருளே இதுதான். இவளுக்கு முன் இரண்டு முறையும், இவளுக்குப் பின் மூன்று முறையும் இப்படிச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. இஸ்ரவேல் ஜனங்கள் புறஜாதிகளுடன் சேர்ந்து தீமை செய்ய முற்பட்டார்கள். விளைவு வீழ்ச்சி. இஸ்ரவேல் மக்கள் தங்கள் பார்வைக்கு எது சரியோ அதைச் செய்தார்கள் [17:6;21-25] இவ்வாறு செய்வதின் முடிவு அழிவுதான்.

ஏதாவது ஒன்று செய்யப்பட வேண்டும் : இஸ்ரவேல் மக்கள் தேவனை அறிந்திருந்த காரணத்தினால் தேவன் எப்படியோ தம் நாமத்தினிமித்தம் அவர்களை நினைவுகூருகிறார். பாவம் செய்யும் பொழுது தேவன் அவர்களை பகைவர்களின் கையில்

ஒப்புக் கொடுத்து மனந்திரும்பும்படி ஒரு தருணத்தை ஏற்படுத்து கிறார். தெபொராளின் நாட்களிலும் நிலைமை இப்படித் தான் இருந்தது. ஜனங்கள் கர்த்தரை நோக்கி முறையிட்டார்கள் (4:3), இவர்களைக் காப்பதற்காக தேவன் தெபொராளை தெரிந்தெடுக் கிறார். ஏன் தெபொராள்? இவ்வளவு அவசரமான, கடினமான வேலையைச் செய்ய இவளுக்கு என்ன தகுதி இருந்தது?

1. இவள் ஞானம் நிறைந்தவளாய் இருந்தாள். ஏனென்றால், ஜனங்கள் அருகிலிருந்தும், தூரத்திலிருந்தும் இவளிடத் திற்கு நியாயத்திற்காக வந்தார்கள். ஒவ்வொரு தலைமுறையிலும் இப்பேர்ப்பட்ட ஆரோக்கியமான தீர்ப்பு வழங்கவும், நேர்மையான எண்ணமும், நேரான சிந்தனையுமுள்ள தெபெராக்கள் தேவை.

2. இஸ்ரவேலின் அன்றைய சூழ்நிலையைப் பற்றி பகுத்துப் பார்த்து, அதைப் பற்றிய தெளிவான கருத்தைப் பெற்று, ஏதாவது ஒன்று செய்யப்பட வேண்டும் என்று முடிவு செய்தாள். இருபது வருடம் பேரீச்ச மரத்தடியில் உட்கார்ந்து நியாயம் விசாரித்த அவளால் தன்னுடைய அத்தனை பொறுப்புகளிடையேயும், தானாக வீட்டையும் பார்த்துக் கொண்டு, அதே சமயம் மக்களின் நிலை பற்றிய ஒரு அவசர உணர்வு கொண்டவளாய் செயல்பட்டுள்ளாள்.

3. பரலோகத்தின் தேவன் பார்வோனைத் தோற்கடித்ததையும், தன் ஜனங்களை மன்னாவைக் கொண்டு போஷித்ததையும், எரிகோவின் மதில்களை விழத்தள்ளினது போன்ற செயல் களை நினைத்து அந்த தேவன் மீது விசுவாசம் வைத்திருந் தாள். ஆம், தேவன் மீது பாசம் வைத்திருந்தாள். அவளுக்கிருந்த விசுவாசத்தினால் தைரியம் பிறந்தது.

4. தேவன் சொல்லியிருந்த திட்டத்தைப் பின்பற்றி செயல் படுத்துவதற்கு தெபொராளுக்கு தைரியம் இருந்தது. பாராக்கை வரவழைத்து, நீ நப்தலி புத்திரரிலும், செபுலோன் புத்திரரிலும் பதினாயிரம் பேரைக் கூட்டிக் கொண்டு, தாபோர் மலைக்குப் போகக்கடவாய் என்றும், நான் யாபீனின் சேனாதி பதியாகிய சிசெராவையும், அவன் ரதங்களையும் அவன் சேனையையும், கீசோன் பள்ளத்தாக்கிலே உன்னிடத்திற்கு வர இழுத்து அவனை உன் கையில் ஒப்புக் கொடுப்பேன் என்றும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிடவில்லையா என்றாள் (நியா. 4:6;7) பாராக், நீ என்னோடே கூட வந்தால் போவேன். என்னோடே கூட

வராவிட்டால் நான் போகமாட்டேன் என்றான். தெபொராளின் தைரியம், விசுவாசம், பலம் இவைகள் தனக்குத் தேவை என்று பாராக் உணர்ந்திருந்தான். உன்னோடே கூட நிச்சயமாய் வருவேன் என்றாள். தைரியம் என்பது ஒருவரிடமிருந்து பிறருக்கு தொற்றிக் கொள்வதாகையால் தெபொராளிடமிருந்து, பாராக் குக்கும், பிறகு பதினாயிரம் பேருக்கும் தைரியம் வந்தது. எதிரிகள் வெட்கப்படுமளவுக்கு தோற்றுப்போனார்கள். இஸ்ரவேலுக்கு மகிமையான வெற்றி கிட்டியது என்பதை நியா: 5ம் அதிகாரத்தில் தெபொராளின் அழகான பாடல் நமக்குக் காட்டுகிறது.

ஜெயம் எப்படி கிடைத்தது? : தேவனோடு சேர்ந்து நாம் வேலை செய்யாவிட்டால் ஒரு போதும் வெற்றி இல்லை. முதலா வது, தெபொராள் எழுந்தாள். இது ஏதோ அவளைப் பெருமையாய் எண்ணிப் பேசப்பட்ட ஒன்றல்ல. தேவனுக்கு மகிமை செலுத்தினாள். அதே சமயம் இப்பேர்ப்பட்ட சிலாக்கியம் தனக்குக் கிடைத்ததை எண்ணி மகிழ்ந்து களி கூறுகிறாள். தாழ்மை என்பது செயல்படாமல் சும்மா இருப்பதல்ல. தேவனைச் சார்ந்து, உடனுள்ளவர்களையும் சேர்த்துக் கொண்டு செயல்படுவதாகும்.

ஜனங்கள், தெபொராள், பாராக் அனைவரும் சேர்ந்து தேவன் சொன்னபடி செய்தார்கள். தேவனிடம் பொறுப்பை விட்டு விட்டு சும்மா இராமல் எழுந்து செயல்பட்டார்கள், வெற்றி கிடைத்தது.

நன்மைக்கோ, தீமைக்கோ தனிநபர் எவ்வளவு முக்கியம் என்று பாருங்கள்? ஆயி பட்டணத்தில் இஸ்ரவேலின் தோல்விக்கு ஆகான் காரணமாயிருந்தான். மிரியாமின் பாவம் ஆயிரக்கணக் கானவர்களைத் தாக்கியது.

தன்னை முழுவதுமாக தேவனுக்கு அர்ப்பணித்த தெபொராள் நிமித்தம் ஒரு தனி நபர் தேவனுக்காக வல்லமையாய் எழுந்து செயல்பட முடியும் என்பது நமக்குத் தெரிகிறது. பின்பு தேசம் 40 வருடம் அமைதியாயிருந்தது என்று பார்க்கிறோம் [5:31]

இதை வாசிக்கும் அருமையான சகோதரிகளே! தெபொராள் மூலம் நமக்குத் தைரியமும், விசுவாசமும் கிடைக்கும் என்று நம்புகிறேன். புதிய ஏற்பாட்டு உபதேசத்தின் கீழ் வாழும் நாம் இப்படி நியாயதிபதியாகவோ, தீர்க்கதரிசியாகவோ இருக்க வேதம் அனுமதி கொடுக்கவில்லை . ஆனால், பிறரோடு சேர்ந்து செயல்பட தெபொராளின் மனது நமக்குக் கிடைக்கும். விழி, விழி, தொபொராளே விழி, விழி [5:12].

இஸ்ரவேல் முற்றிலும் அழிந்து போகாமலிருக்க, தெபொராள் விழித்து எழ வேண்டிய தாய் இருந்தது. ஆம், மக்கள் ஆத்துமாவில் முற்றிலும் அழிந்து போகாமல் இருக்க நானும், நீங்களும் தேவைப் படுகிறோம். மனப்பூர்வமாய் நாம் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். எந்தக் காரியமாயிருந்தாலும் தீமைக்கு எதிர்த்து நின்றே ஆக வேண்டும். தேவனுக்கடுத்த சரியான காரியங் களாயிருந்தால் நம்மை அப்படியே அர்ப்பணம் செய்து என்ன வானாலும் பரவாயில்லை என்று தேவ னோடுசேர்ந்து நிற்க வேண்டும்.

மேலும், நம்மைச் சுற்றிலும் என்ன நடக்கிறது என்பதின் அறிவும் வேண்டும். சத்துருவின் பலம் தெரிந்தால் தான் போராட முடியும். அத்தோடு தேவனுடைய வார்த்தைகளின் அறிவும் நமக்கு அவசியம். அப்போது தான் எதிராளியாகிய பிசாசை ஜெயிக்க முடியும்.

நமக்குத் தைரியம் வேண்டும். தேவனோடும், தேவனு டைய வார்த்தைகளோடும் சேர்ந்து வாழ்ந்தால்தான் தைரியம் கிடைக்கும். சோர்ந்து போன இருதயம் நமக்கு வேண்டாம். உண்மைக்காகவும், நீதிக்காகவும் விழித்தெழுந்து வேலை செய்ய இஸ்ரவேலின் தாயாகிய தெபொராளைப் போன்ற சிங்கத்தின் இருதயத்தைப் போன்று பலமான இருதயம் கொண்ட ஸ்திரீகள் புதிய ஆண்டில் தேவனுக்கு தேவை. ஆமென்!! †

---

**அத்திமரம் துளிர்விடாமற்போனாலும்,**

**திராட்சச்செடிகளில் பழம் உண்டாகாமற் போனாலும்,**

**ஒலிவமரத்தின் பலன் அற்றுப்போனாலும்,**

**வயல்கள் தானியத்தை விளைவியாமற்போனாலும்,**

**கிடையில் ஆட்டு மந்தைகள் தலற்றுப்போனாலும்,**

**தொழுவத்திலே மாடு இல்லாமற் போனாலும்,**

**நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியா யிருப்பேன்**

**என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன்.**

**ஆபகூக் 3:17-18**

**வாலிபர் பகுதி**

# சிந்தனைக்கான 4 கேள்விகள்

Dr. **ஏபில் நாயகம்**

**கி**றிஸ்துவுக்குள் பிரியமான வாலிபர்களே! உங்கள் யாவருக்கும் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த வருடத்தின் இறுதி மாதத்திற்கு தேவன் நம்மை சுகமாய் நடத்தியிருக்கிறார். வருடத்தின் இறுதியில், கடந்து வந்த பாதையை திரும்பிப் பார்ப்பது பெரும்பாலும் எல்லோரும் செய்யக்கூடிய ஒரு செயல் தான். அதினாலே பல நன்மைகளுண்டு. நற்காரியங்களை நினைத்து சந்தோஷப்படுவதும், தவறுகளை திருத்திக்கொள்ள விரும்புவதும் ஆரோக்கியமான செயல்களே. இது ஆவிக்குரிய வாழ்க்கைக்கும் பொருந்தும். அந்த வகையிலே 4 கேள்விகளோடு நம் சிந்தனையை தொடங்குவோம். இந்தக் கேள்விகளுக்கான பதில்கள் நமக்கு சந்தோஷத்தைக் கொடுத்தால் தேவனுக்கே மகிமை. திருத்திக்கொள்வது அவசியமெனில், தேவனின் உதவியோடு புதிய ஆண்டில் அப்படிச் செய்ய நம்மை ஒப்புக்கொடுக்க இக்கேள்விகள் உதவும்.

**முதலாவது, என்னுடைய வாழ்வின் மையமாக எது இருக்கிறது?**

அர்ப்பணிப்பு சம்பந்தமான கேள்வி இது. நான் யாருக்காக வாழ்கிறேன் ? என் வாழ்க்கை எதைச் சுற்றி ஓடுகிறது? படிப்பு, வேலை, குடும்பம், நண்பர்கள், பணம் , உல்லாசம் என்று பல பதில்கள் இருந்தாலும், இவைகள் ஒருவேளை நல்ல காரியங்களாகவே இருந்தாலும், இவைகளில் எதுவுமே வாழ்வின் மையம் அல்ல என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். ஏனென்றால், வாழ்க்கை கடினமாகும்போதும், சூழ்நிலைகள் மாறும்போதும் இவை அனைத்துமே தடுமாற்றம் கொண்டது. உறுதியான மையம் என்பது எந்த சூழ்நிலையிலும் தடுமாற்றம் இல்லாததாய் என்றுமே தன்மை மாறாததாய் இருக்க வேண்டும்.

பல வேளைகளில் எது நம் வாழ்வின் மையமாக இருக்கிறதோ அதை ஒருவகையில் நாம் வணங்கவும், தேவனுக்கு இணையான இடத்தை அதற்கு கொடுக்கவும் முற்படுகிறோம். குழப்பம், கவலையும் அதிகமாக நம் வாழ்க்கையில் இருப்பின் தேவன் நம் வாழ்வின் மையத்தில் இல்லை என்று புரிந்து கொள்ளலாம். சமாதானமும், நிறைவும் பெரும்பாலும் இருக்கிறதென்றால்,

நிச்சயமாக தேவன் தான் வாழ்வின் மையத்தில் இருக்கிறார் என்று நாம் அறிந்து கொள்ளமுடியும்.

**இரண்டாவதாக, என்னுடைய வாழ்வின் தன்மைகளும், குணாதிசயங்களும் எப்படி இருக்கிறது?**

இது சீஷத்துவத்திற்கான கேள்வி. நாம் என்ன செய்கிறோம் என்பதை விட நாம் யாராக இருக்கிறோம் என்பதில் தேவன் கவனமாக இருக்கிறார். ஒன்றை நாம் புரிந்துகொள்ள வேண்டும். நம்முடைய குணாதிசயத்தை நித்தியத்திற்கு எடுத்துச்செல்வோமே தவிர, மற்றபடி நாம் முக்கியம் என்று நினைக்கும் படிப்பையோ, வேலையையோ, செல்வத்தையோ, குடும்பத்தையோ நித்தியத்திற்குள் எடுத்து செல்ல முடியாது. அப்படியானால், நம்முடைய குணாதிசயத்தையும், நமக்கு அடையாளமாய் இருக்கும் பண்புகள் பற்றியும் நாம் கவனம் உள்ளவர்களாக, அதைப்பற்றி கவலைகொள்பவர்களாக இருக்கவேண்டும். ஆவியின் கனிகளும், இயேசு மலைப் பிரசங்கத்தில் கூறின நற்கிரியைகள் நம்மிடம் இருக்கிறதா என்று சுயபரிசோதனை செய்து பார்க்க வேண்டும்.

மூன்றாவதாக, என்னுடைய வாழ்வின் பங்களிப்பு என்ன ?

இது தேவனுக்கான சேவை சம்பந்தமானது. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் என்னுடைய பங்களிப்பு என்ன ? என்னுடைய தாலந்து, நேரம் மற்றும் அனுபவம், இவைகளை வைத்து நான் தேவனுக்காக என்ன செய்துகொண்டிருக்கிறேன் ? நம்முடைய சேவைகளைச் செய்ய முதலில் நாம் எதில் சிறந்து விளங்குகிறோம் என்ற சுய புரிதல் அவசியம். நம்முடைய பங்களிப்பு எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம்.

நான்காவதாக, என்னுடைய ஐக்கியம் யாரோடு இருக்கிறது?

இது சகோதர அன்பு பற்றியது. தேவனுடைய குடும்பத்தோடு எனக்கு இருக்கும் உறவையும் , உறவின் அளவையும் நான் பரிசோதித்துப் பார்க்கவேண்டும். ஒருவருக்கொருவர், உங்களுக்குள்ளே' என்று வேதம் பயன்படுத்தும் பதங்களை கொண்டுள்ள வசனங்களை நாம் பின்பற்ற ஒரு குடும்பத்தில் நாம் ஐக்கியமாக இருந்தாக வேண்டும். தனி மனிதனாக, தேவனுடைய குடும்பத்தில் ஐக்கியமில்லாமல் நாம் தேவனைப் பிரியப்படுத்த முடியாது. சபையில் ஐக்கியமாக இல்லாமல், தேவனுடைய பிரமாணங்களை நிறைவேற்றுவது கூடாத காரியம்.

நமது வாழ்வின் மையத்தில் தேவன் இருக்கிறாரா? நமது குணாதிசயங்கள் அவருடையதாய் இருக்கிறதா ? தேவனுடைய சபையிலும், அவரது சேவையிலும் நாம் பங்கெடுக்கிறோமா? நமது சகோதரர்களோடும், சகோதரிகளோடும் நம் ஐக்கியம் உறுதியாக இருக்கிறதா? இவை எல்லாவற்றிலும் நாம் வேதத்தின் வழிகாட்டலுக்கு மாறி, அவருடைய பாதையில் நடக்க நினைத்தால், நிச்சயமாக தேவன் தமது கிருபையையும், ஆசீர்வாதங்களையும் நமக்கு வழங்குவார்.

இந்த ஆண்டின் முடிவில் இருக்கிற நாம் , நம்முடைய குறைகளை சிந்திக்கவும், தேவனின் உதவியோடு நாம் வாழ்வை சீர் செய்துகொள்ளவும், வருகின்ற புதிய ஆண்டில் அவருக்கே மகிமை தரும் விதமாக வாழவும் நம்மை ஒப்புக்கொடுப்போம். கிருபையும் சமாதானமும் நம் வாழ்வில் நிறைந்திருப்பதாக! ஆமென்!! †

## வேதாகமத்தில் தேவன் பயன்படுத்திய முதியவர்கள்

1) தேவன் நோவாவை காப்பாற்றிய போது வயது 600. நீதிமானாக இருந்த நோவாவை நீரில் மூழ்காமல் இருக்கும் கப்பல் கட்டும் பொறியாளனாக தேவன் பயன்படுத்தினார்.

2) தேவன் ஆபிரகாமை கானான் தேசம் அழைத்த போது வயது 75. விக்கிரக ஊரில் கணவனாக இருந்தவனை கானான் அழைத்து விசுவாச தகப்பன் ஆக்கினார்.

3) தேவன் இஸ்ரவேலரை விடுதலையாக்க மோசேயை அழைத்த போது வயது 80. ஆடு மேய்த்தவனை சுமார் இருபது லட்சம் மனிதர்களை மேய்க்கும் தலைவன் ஆக்கினார்.

4) தேவன் காலேப்பை நிலத்தினால் ஆசீர்வதித்த போது 85 வயது. 40 வருஷம் கால்நடையாக நடந்தவனுக்கு மலைதேசம் கொடுத்து கானானின் குடிமகனாக்கினார்.

5) அன்னாள் 84 வயதானபோது கைம்பெண்ணாக இருந்தவளை தீர்க்கதரிசி ஆக்கினார்.

6) சகரியா - எலிசபெத் வயதான பின்பும் குழந்தை இல்லாமல் இருந்தார்கள். பிள்ளை இல்லாதவர்களுக்கு நல்ல குழந்தையை கொடுத்தார்.

**சிறுவர் பகுதி**



# தேவமனிதன் - 8

Dr. *பிரெய்ஸி*

**ஹெ**லோ குழந்தைகளே! நீங்கள் அனைவரும் நன்றாக இருப்பீர்கள் என்று நம்புகிறோம்.எங்கள் கட்டுரைகளை ஒவ்வொரு மாதமும் படித்து வருகிறீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம். இந்த மாதம் வேறொரு தேவ மனிதர் பற்றி பார்ப்போம்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் 4:36-ல் சீப்புருதீவானும், லேவியனும், அப்போஸ்தலராலே ஆறுதலின் மகன் என்று அர்த்தங்கொள்ளும் **பர்னபா** என்னும் மறுபேர்பெற்றவனுமாகிய **யோசே** என்பவன் குறித்துப் பார்க்கலாம். பர்னபா தனக்கு உண்டாயிருந்த **நிலத்தைவிற்று**, அதின் கிரயத்தைக் கொண்டுவந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான். அவர் தேவபணிக்காக உழைத்தார். அப்போஸ்தலருடைய நடபடிகள் 9-ல், பர்னபா மனமாற்றமடைந்த பவுலை அப்போஸ்தலர்களிடம் அழைத்துச் சென்றவர் இந்த பர்னபா. பவுலும், பர்னபாவும் நற்செய்தியை அறிவிக்கும்படி தூர இடங்களுக்குப் பயணம் செய்ய தேவனால் அழைக்கப்பட்டவர்கள்.

அன்புள்ள குழந்தைகளே! நாம் மேலே கவனித்த பர்னபா ஏழைகளுக்கு உதவினார் மற்றும் இறைவனுக்காக வேலை செய்ய எப்போதும் தயாராக இருந்தார். பர்னபா யூதேயா முழுவதும் ஏழைகளுக்கு உதவியதோடு, தேவனுக்காக வேலை செய்யத் தயங்கவில்லை. பர்னபா போல நீங்கள் அனைவரும் தேவனின் பணிக்காக எதையும் விட்டுக்கொடுக்கத் தயாராக இருந்தால் இறை ஆசி பெற்று வாழ முடியும்

**அன்புடன்,**
**உங்கள் பிரெய்ஸி அக்கா.**

# தேவனாலே நற்சாட்சி பெற்றவர்கள்

Bro. பாண்டியன்

**பூ**மிக்குரிய, ஆவிக்குரிய சகல நன்மைகளுக்கும் காரணராகிய தேவனுக்கு மகிமை உண்டாவதாக. ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக! வேதத்தில் நம் முன்னோர்கள் விசுவாசத்தினாலே நற்சாட்சி பெற்றார்கள். ஆபேலுக்குக்கூட தேவனே சாட்சிக் கொடுத்தார் என்று வாசிக்கிறோம். [எபி 11:1-4], நம் ஆண்டவர் இயேசுவும் நம்முடைய நற்கிரியைகளைக்கண்டு மனுஷர் பரலோகப் பிதாவை மகிமைப்படுத்தும்படி நடந்து கொள்ள வேண்டும் என போதிக்கிறார் [மத் 5:24]. மேலும், பேதுரு சொல்வது, **உங்கள் நற்கிரியைக் கண்டு புறஜாதிகள் வருகையிலே தேவனை மகிமைப் படுத்தும்படி நடந்து கொள்ள** நமக்கு புத்தி சொல்லுகிறார் [ பேதுரு 2:12], இப்படி நாம் தேவனுக்கு மகிமை செலுத்தாமல், தற்பெருமைக்காக எல்லா மனுஷரும் உங்களைக் குறித்து புகழ்ச்சியாய் பேசும்படி நடந்தால் உங்களுக்கு ஐயோ [லூக்கா 6:26]. ஆகவே, தேவனால் நற்சாட்சி பெற நாம் செய்ய வேண்டியதை இங்கு கவனிப்போம்.

தேவன் சாத்தானிடம் யோபு பற்றிக் கூறும்போது, என் தாசனாகிய யோபு, உத்தமனும், சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகும் அவனைப் போல் பூமியில் ஒருவனும் இல்லை [யோபு 1:8] என்ற சிறப்பான நற்சாட்சியைக் கொடுத்தார். யோபுவுக்கு கிடைத்த இந்த நற்சாட்சி பூமியிலல்ல, மேலே தேவ சந்நிதியில் இது கொடுக்கப்பட்டது எவ்வளவு மேன்மை எனப் பாருங்கள். நாம் யோபுவிடம் கற்க வேண்டிய முக்கிய பாடம் என்னவெனில், உபத்திரவங்களில் நாம் சோர்ந்து போகாமல் பொறுமையோடே இருக்க வேண்டியது. அதை விட முக்கியமான மற்றொன்று, அந்த சமயங்களில் தேவனைப் பற்றி குறை சொல்லாமல் இருப்பது [யோபு 1:21.22]. தேவனிடம் நன்மையை பெறும்போது பொறுமையோடு இருக்கிறபடியே தீமையை பெறும்போதும் இருக்கிற பக்குவத்தை யோபுவிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டும். அவர் என்னைக் கொன்று போட்டாலும் அவர் மேல் நான் நம்பிக்கையாய் இருப்பேன் [13:15] ஆகவே, சோதனையை சகிக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் உத்தமனென்று விளங்கின பின்பு அவனுக்கு ஜீவக்கிரீடம் உள்ளது என்பதை நினைவில் வைப்போம் [யாக் 1:12].

இரண்டாவதாக, ஆபிரகாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்து தன் பிரியமான ஒரே குமாரனை பலியிட முன்வந்த போது, நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்று நற்சாட்சி கொடுத்தார் [ஆதி 22:12]. ஆண்டவர் இயேசுவும் தம்

சீஷரிடம் ஒருவன் தன்னைத்தானே வெறுத்து தன் சிலுவையை எடுத்துப் பின்பற்றவும், உலக ஆதாயத்தை வெறுக்கும்படியாகவும் போதித்தார் (மத் 16:24–26). அப்படிப்போலவே, அவர்கள் தங்கள் குடும்பம், தொழில், ஆதாயங்கள் யாவற்றையும் விட்டு இயேசுவைப் பின்பற்றினார்கள் (மத் 19:27–29). அதினாலே மறுஜென்ம காலத்திலே இயேசுவுடனே அமரும் சிங்காசனம், நித்திய ஜீவனும் அவர்களுக்குப் பரிசாகக் கிடைத்தன. நாம் நமக்குப் பிரியமானதை தேவனுக்காக விட்டுக் கொடுக்கும் போது அவரோடே உட்காரும் சிலாக்கியம் கிடைக்கிறது (எபே. 2:7). மாத்திரமல்ல, அவர் நம்மைக் கடிந்து கொண்டு சிட்சிக்கும் போது ஜாக்கிரதையாய் மனந்திரும்பினால் அவரோடே உட்காரும் சிலாக்கியம் உண்டு (வெளி 3:19–21).

மூன்றாவதாக, மோசேயைப் பற்றி தேவன் சொன்னது. எண் 12:7,8 என் தாசனாகிய மோசே என் வீட்டில் எங்கும் அவன் உண்மையுள்ளவன் என்கிறார். இங்கு வீடு என்பது இஸ்ரவேல் சபையாரைக் குறிக்கிறது (யாத் 12:3), புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் சபையே தேவனுடைய வீடு (1 தீமோ. 3:15) வீட்டை உண்டு பண்ணின இயேசு மோசேயை விடப் பெரியவர் (எபி 3:3) பொன்கன்றுகுட்டி விஷயத்தில் தேவன் ஜனங்களை அழிக்க முற்பட்ட போது மோசே மன்றாடி ஜெபித்து அவர்களை தப்புவித்தான் (யாத் 32:10–13) அதுபோல, நாம் பிறருடைய தப்பிதங்களை மன்னிக்கவும், அவர்களுக்காக ஜெபிக்கவும் வேண்டியதும் மிக அவசியமாகும் ( 4:32 1 தீமோ 2:1,2) நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாய் இருக்கிறது (யாக் 5:16). நமது எஜமானர் இயேசுவும் நாம் பாவத்திலே அழிந்து போகாதபடிக்கு நமக்காக தேவனிடம் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார் என்பதை மறவாதேயுங்கள் (I யோவான் 2:1). தேவனுடைய வலது பாரிசத்தில் இருந்து நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே (ரோமர் 8:34)

இறுதியாக, தேவனுடைய தாசனாகிய தாவீதைக் குறித்து பவுல் அப்போஸ்தலன் குறிப்பிடுவதைக் கவனியுங்கள். பின்பு அவர் சவுலைத்தள்ளி, தாவீதை அவர்களுக்கு ராஜாவாக ஏற்படுத்தி, ஈசாயின் குமாரனாகிய தாவீதை என் இருதயத்துக்கு ஏற்றவனாகக் கண்டேன். எனக்குச் சித்தமானவைகளை எல்லாம் அவன் செய்வான் என்று அவனைக் குறித்து சாட்சியும் கொடுத்தார் (அப் 13:22). கிறிஸ்துவின் முக்கிய உபதேசமாகிய சத்துருவை சிநேகியுங்கள் என்பதை தாவீது தன் வாழ்வில் சிறப்பாக நிறைவேற்றினார். தன்னைக் கொலை செய்ய முயன்ற சவுல் ராஜாவை கொல்லும் வாய்ப்பு இரண்டு முறை கிடைத்தும் ( I சாமு 24:4) அதைத் தவிர்த்து ( I சாமு 26:23) பழிவாங்காமல் விட்டுக் கொடுத்தான். தேவன் பழி வாங்குதல்

எனக்குரியது என்கிறார் அல்லவா? அவனுடன் உதவி செய்ய அநேகர் இருந்தும் அதை மேன்மையாக எண்ணாமல் சவுலிடம் தன்னைப்பற்றி. ஒரு தெள்ளுப்பூச்சி, ஒரு செத்த நாய் என்றும் குறிப்பிட்டு தன்னைத் தாழ்த்தினார். ( I சாமு 24:14), தன்னை நிந்தித்த ஒரு சாதாரண மனுஷனைக் கூட அவன் பதிலுக்குக் கோபமாக பேசவில்லை. அதனால் தான், தேவன் அவன் சந்ததியில் தம் குமாரனை அனுப்பினார். ஆண்டவர் இயேசுவும் நான் சாந்தமும், மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன், என்னைப் பின்பற்றுங்கள் என்றார்.

எனக்கு அன்பானவர்களே! யோபு போல நாம் பொறுமையோடே தேவனிடம் நம்பிக்கையாய் இருந்து, ஆபிரகாமைப் போல நமக்குப் பிரியமானதை தியாகம் செய்து, மோசே போல பிறருக்காக ஜெபித்து, தாவீதைப் போல தேவனை முன்னிலைப்படுத்தி வாழுவோம். அப்பொது இறுதியில் இயேசு நம்மையும் வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே என்பார் தேவ கிருபை நம் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.

✝

## தேவ படைப்பின் மகத்துவம் !

**விமானி அறையைப் நீங்கள் என்றாவது நன்கு கவனித்ததுண்டா?**

- *அதிலே பாருங்கள்! நாம் வானில் பறக்க வேண்டும் என்பதற்காக எத்துனை எத்துனை பெரிய, இடியாப்பச் சிக்கலான மீட்டர் கருவிகள், அளவை மானிகள், மற்றும் திரைக் காட்சிகள், கண் புடைக்கவைக்கும் காட்சிகள் காணப்படுகிறன!*
- *சிட்டுக்குருவி தொட்டு புறாக்கள், கிளி, மைனா என்று வானுயரப் பறக்கும் கழுகு வரை அனைத்துப் பறவைகளையும் சற்று கற்பனை செய்து பாருங்கள்!*
- *அவைகளின் மூளையில் இருப்பது வெறும் ஒரு தர்பூசணி விதையளவான சின்னஞ்சிறிய ஒரு பகுதிதான். அதற்குள்தான் கடுஞ்சிக்கலான முடிச்சுகள்நிறைந்த இந்த அளவை மீட்டர்கள், திரைகள் எல்லாம் உள்ளன. தெரியுமா?*
- *வேகக் கட்டுப்பாடு, உயர்த்துதல், தாழ்த்துதல், பாரம், சுமை, கனதி, திக்குத்திசைகள், திசைகாட்டிகள், நேரசூசிகள், விரோதிகளிடமிருந்து தற்காத்து விரண்டோடுவதற்கான சமிக்கைகள் மற்றும் அவைகளுக்கன இரைகளக் கண்டறியும் ராடர்கள், தரை இறக்கும் மீட்டர்கள், உயரப் பறக்கும் மீட்டர்கள் என எல்லாம் பறவையின் அந்த சிறு மூளையில்தான் அமையப்பெற்றுள்ளன.*
- *இத்தனைக்கும் அவைகளுக்கு கட்டுப்பாட்டு கோபுரம், வயர்லெஸ் றைகள், செய்மதிகள், செயற்கைக்கோள், ஜீ பீ எஸ் என நவீனமறிந்த எந்த வசதிகளும் இல்லை.*
- *ஒரு பறவைக்கு இத்தனையும் வைத்தது தேவனுடைய படைப்புதானே...*

# பிதாவே ! நாட்களை எண்ணும் அறிவை போதித்தருளும்

சகோ. K.M. பிலிப் - பவானி

உலகில் வாழும் உயிரினங்களில் அதிக அறிவு உள்ளவன் மனித இனம் மட்டுமே. அந்த அறிவைக் கொண்டு விண்ணை அளக்கிறான், ஆகாயத்தில் மிதக்கிறான், கடலுக்குள் உலாவுகிறான், பூமிக்குள் செல்கிறான், விஞ்ஞான அறிவால் எல்லாவற்றையும் துல்லியமாய் கணக்கிடுகிறான். ஆனால், தான் பூமியில் வாழும் நாட்களை இதுவரை எந்த மனிதனும் தன் அறிவால் கணக்கிட முடியவில்லை. ஆனால், பூமியில் வாழும் மனிதன் தன் நாட்கள் தன்னை உண்டாக்கிய தேவனுடைய கரத்தில் இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும் (சங் 31:15). அந்த நாட்கள் அவருடைய நன்மையால் சூட்டப்படுகிறது. அது நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்கும் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும், கிருபையும் தொடரும். இதை விசுவாசித்தால், மனிதன் பூமியில் வாழும் நாட்களெல்லாம் செழிப்பாய் திருப்தியாயிருக்கும். (சங் 91. 6,65;11.23,6)

இதை உணர்த்து புரிந்து கொண்ட தேவ மனிதன் மோசே எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குத் தாரும் என்று ஜெபித்தார். (சங் 90:12) மோசே ஒரு ஜெபிக்கிற மனிதன் தனக்காக மட்டுமல்ல தன்னைச் சார்ந்த யாவருக்காகவும் ஊக்கமாய், உறுதியாய் ஜெபிக்கிறவர். இஸ்ரவேல் மக்களை எகிப்திலிருந்து விடுவித்து அழைத்து வந்து செங்கடலை கால்நடையாய் கடக்கச் செய்து சீனாய் மலை அடிவாரத்தில் தங்கச் செய்தார். தேவனுடைய அழைப்பை ஏற்று தேவையான பிரமாணங்களைப் பெற்று வரத் மோசே சீனாய் மலையின் மீது ஏறி சென்றார். அவர் திரும்பி வர தாமதமானதால் உடனே மக்கள் தேவனுடைய வாக்கை மறந்து தற்போது அனுபவித்துக் கொண்டிருக்கிற விடுதலையையும் மறந்தார்கள். மக்கள் ஒரு பொன் கன்று குட்டியை உருவாக்கி அதை மேடைகளில் நிறுத்தி'இதுவே தங்களை வழி நடத்தி வந்த தெய்வமென்று ஆராதித்து தேவனை அசட்டை செய்ய ஆரம்பித்தார்கள். இதை அறிந்த தேவன் வணங்காக் கழுத்துள்ள இந்த ஜனங்களை அழித்துப் போட என்னை விட்டுவிடு என்று மோசேயிடம் சொன்னார். ஆனால், மோசேயோ அவர்களை அழிக்காமல் விட்டுவிடும் என்று கெஞ்சி ஜெபித்தான். மோசேயின் மன உருக்கமான ஜெபத்தைக் கேட்ட தேவன் அவர்களை மன்னித்து அவர்களது ஆயுசு நாட்களைக் கூட்டித் தந்தார் (யாக் 32:9-14) மோசே அந்தக் கொடிய நாளில் செய்ய வேண்டியதை ஞானமாய், அறிவாய் ஜெபித்ததால் பத்து லட்சத்துக்கும் அதிகமான இஸ்ரவேலர்களின் ஆயுசு நாட்கள் நீடிக்கப்பட்டது. இத்தகைய ஜெப வீரர் மோசேயின்

சிறிய ஜெபம் தான் **எங்கள் நாட்களை எண்ணும் அறிவை போதித்தருளும்** என்பதாகும். மோசேதான் வணங்காக்கழுத்துள்ள இஸ்ரவேல் மக்களை நாற்பது ஆண்டுகள் ஞானமாய் வழிநடத்த முடிந்தது. அன்பான பெற்றோர்களே 10 வட்சத்திறகு மேலான முரட்டாட்டமுள்ள இஸ்ரவேல் மக்களை தேவன் கொடுத்த ஞான இருதயத்தால் வழிநடத்த முடிந்ததென்றால், தற்காலத்தில் நான்கு அல்லது ஐந்து பேர் உள்ள குடும்பத்தை ஞானமாய் வழிநடத்துவது இயலாத ஒன்றா? ஜெபியுங்கள் பெற்றுக் கொள்ளுங்கள், நடத்துங்கள்.

அன்னாள் தன் வெறுமையான நாட்களை எண்ணிப்பார்த்து தேவன் சிறியவனை புழுதியிலிருந்து எடுத்து, எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்த வல்லவர் என்பதைப் புரிந்து கொண்டு தேவ சமூகத்தில் அழுது ஜெபித்ததால், இஸ்ரவேலின் ராஜாக்களை உருவாக்கும் மாபெரும் தீர்க்கதரிசியான சாமுவேலையும், மூன்று குமாரர்களையும், இரண்டு குமாரத்திகளையும் கூடப் பெற்றுக்கொண்டு திருப்தியாய் வாழ்ந்தாள் (I சாமு 1.2)உங்கள் பிரச்சனை எதுவாக இருந்தாலும் அதைக் குறித்தே சித்தித்து எப்பொழுதும் கவலைப்பட்டுக் கொண்டிருக்காமல் அன்னாளைப் போல எழுந்திருங்கள் தேவ சமூகத்தை நாடுங்கள். ஜெபத்தின் மூலம் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்புறம் அன்னாள் துக்க முகமாயிருக்கவில்லை. இப்படிச் செய்தால் நம் ஜெபம் கேட்கப்படும் நம்மை விசாரிக்கிற தேவன் நம் கவலைகளையெல்லாம் எடுத்துப்போடுவார். உங்கள் துக்கம் சந்தோஷமாய் மாறும்படி ஜெபித்து நாட்களை பிரயோஜனப்படுத்துங்கள்.

மத் 8: 1–5 பகுதியில், இயேசு மலையிலிருந்து இறங்கி தனக்கருகில் வரப்போகிறார் என்பதை அறிந்த ஒரு குஷ்டரோகி, தனக்கு கிடைத்த இந்த அரிய நாளை பிரயோஜனப்படுத்தி, தன் வேதனை நிறைந்த, தீட்டுள்ளவன் என்ற சாபத்திலிருந்து விடுதலை பெற்று சுகவாழ்வு வாழ முடிவெடுத்தான். இருக்குமிடத்தை விட்டெழுந்தான். இரட்சகர் இயேசுவிடம் வந்து, அவரைப் பணிந்து, ஆண்டவரே! உமக்குச் சித்தமானால், என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும் என்று வேண்டினான். உடனே இயேசு தன் கையை நீட்டி, தீட்டுள்ள அவனைத் தொட்டு, எனக்கு சித்தண்டு, சுத்தமாகு என்றார். உடனே அவனது குஷ்டரோகம் நீங்கி சுத்தமானான். பழைய தீட்டான வாழ்க்கை ஒழிந்தது. புதிய வாழ்க்கை அவனைத் தொடர்ந்தது. அன்பானவர்களே! ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தை உங்களைச் சந்திக்கும் பொழுது, அதை எதிர்கொண்டு உடனே ஏற்றுக் கொண்டு தேவ சித்தத்திற்கு ஒப்பு கொடுத்தால் பாவத்திலிருந்து விடுவிக்கப்பட்டு தொடர்ந்து பரிசுத்தமான நாட்களை அனுபவிக்க முடியும். கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள் (சங் 119:1).

லூக்கா 23: 39–43 இப்பகுதியில், இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்ட இரண்டு கள்ளர்களில் ஒருவன் தன் ஆயுசுநாட்களின் முடிவைப் புரிந்து கொண்டான். இன்றே இரட்சண்ய நாள் என்பதையும் உணர்ந்தான். பாவிகளை இரட்சிக்க இவ்வுலகிற்கு வந்த கிறிஸ்து இயேசு தன் அருகில் இருப்பதை ஒரு பெரும் வாய்ப்பாக எண்ணி அவருக்கு முன் தன் மீறுதல்களை அறிக்கையிட்டு ஆண்டவரே! நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்று வேண்டிக்கொண்டான். தன் பாவங்களை உணர்ந்த அந்த கள்ளனை நோக்கி, இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசியிலிருப்பாய் என்றார். சுமார் 3 மணி நேரத்தில் இயேசு தன் ஆவியை பிதாவினிடத்தில் ஒப்புக்கொடுத்தார். அப்படியென்றால், அன்றைய நாளில் தானே பாதாளத்திற்கு செல்ல வேண்டிய அக்கள்ளன் இயேசுவோடு பரதீசுக்குள் சென்றான். ஆம், தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான். அவைகளை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான் [நீ 28:13]. தேவன் ஈவாய் கொடுத்த நாட்கள் நம் கையிலிருக்கிறது. இந்த நாட்களில் தானே நம் நித்திய வாழ்க்கையை எங்கு அனுபவிப்போம் என்பதை முடிவெடுங்கள். பரலோக வாழ்வை சுதந்தரிக்க முடிவெடுங்கள். எடுத்த முடிவில் நிலைத்திருங்கள். விழிப்புள்ளவர்களாயிருங்கள். இயேசுவின் வருகை எதிர்நோக்கி ஆயத்தமாயிருங்கள்.

இன்றும் அநேக விசுவாசிகளின் வாழ்க்கை நிலை புலம்பலாகவே இருக்கிறது. இதற்குக் காரணம், நாட்களை எண்ணும் ஞான இருதயம் இல்லாததேயாகும். ஆனால், தேவப் பிள்ளை தாவீது என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது என்பதில் தெளிவாயிருந்தால் [சங் 31:15] பயம், கலக்கம் இன்றி தைரியமாய் எதிர் நின்று வாழ்ந்து காட்டினார். தாவீதின் காலம் கரடியின் கையில்; சிங்கத்தின் வாயில்; கோலியாத்தின் கையில் சிக்கியது. ஆனால், தாவீதோ தேவனுடைய கரத்தில் இருந்தான். இவைகள் ஒன்றும் அவனை மேற்கொள்ள முடியவில்லை. அதுமட்டுமல்ல, சோதனைகளைக்கண்டு பயப்படாமல், நான் இங்கு வந்ததற்கு முகாந்தரம் உண்டு என்று கோலியாத்துக்கு முன் எதிர் நின்று, இராணுவங்களின் தேவனாகிய கர்த்தரின் நாமத்தினாலே வருகிறேன் என்று சொல்லி கோலியாத்தை வீழ்த்தினான். அந்த நாளை இஸ்ரவேலருக்கு வெற்றியின் நாட்களாக, மகிழ்ச்சியின் நாளாக மாற்றிக் கொடுத்தான். நாம் கூட நம்மை எதிர்கொள்ளும் பிசாசின் சோதனைகளை இயேசுவின் நாமத்தினால், ஆவியின் பட்டயமாகிய தேவ வசனத்தைக் கொண்டு ஜெயம் பெற்றவர்களாயிருப்போம். நம் காலங்கள் தேவனுடைய கரத்திலிருக்கிறது என்பதே நம் விசுவாசமாயிருக்கட்டும். கர்த்தருக்குப் பயப்படுதல் ஆயுசு நாட்களைப் பெருகப்பண்ணும் [நீதி. 10:27].

அன்பானவர்களே! நாட்களை சேமித்து வைக்க முடியாது; மீண்டும்

திரும்பப் பெறவும் முடியாது. ஆனால், தேவ ஆலோசனையின்படி காலத்தை சரியாய் பயன்படுத்தினால் நாம் இழந்தவைகளை பெற்றுக் கொள்ள முடியும்; அவை ஆசீர்வாத நாட்களாகவும் இருக்கும். நமக்குக் கொடுக்கப்பட்ட நாட்களில், கர்த்தரை நம்பி நன்மை செய்வோம் (சங் 37:3). **II** இரா:7–ல் எலிசாவின் நாட்களில் சீரியர்கள் படையெடுத்து வந்து இஸ்ரவேலரின் கோட்டையை முற்றுகையிட்டார்கள். முற்றுகை நீடித்ததால் கோட்டைக்குள் இருக்கும் இஸ்ரவேலர்கள் உண்ண உணவின்றி பட்டினியால் துவண்டு போனார்கள். தேவன் அவர்களை விடுவிக்க இரவோடு இரவாக, இராணுவங்களின் இரைச்சலை கேட்கச் செய்து, சீரிய இராணுவம் எல்லாவற்றையும் விட்டு ஜீவன் தப்ப ஓடச் செய்தார். இந்த நேரத்தில் அங்கு வந்த 4 குஷ்டரோகிகள் கூடாரத்திற்குள் புகுந்து தங்கள் பசியை ஆற்றி, தேவையானவைகளையும் எடுத்து வைத்துக் கொண்டனர். ஆனாலும், தங்களுக்கு கொடுக்கப்பட்ட அந்த நாளைப் பற்றி சிந்தித்தார்கள். **இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள்** என்று உடனடியாக சென்று இந்த நற்செய்தியை இஸ்ரவேலர்களுக்கு கிடைக்கும்படி செய்து, அவர்களை கொடிய பஞ்சத்திலிருந்து காப்பாற்றினார்கள். நாம் தேவனால் பெற்றுக்கொண்ட இந்த சுவிசேஷ நற்செய்தியைப் பாவத்தின் கொடிய சூழலில் சிக்கித்தவிக்கும் மக்கள் பெற்று இரட்சிக்கப்பட முடிந்ததை உற்சாகமாய் செய்வோம். **வந்து பாருங்கள்** என்று சபைக்கு அழைத்து வருவோம். நம் பங்குக்கு பரலோகில் பொக்கிஷம் (ஆத்துமாக்கள்) சேர்க்கப்படும். கிடைத்த நாட்களை ஒருபோதும் அசட்டை செய்து விடாதீர்கள். என்னிடத்தில் 5 அப்பங்களும் 2 மீன்களும் தானே இருக்கிறது என்று யோசிக்காதே. கொடு நன்மை செய்; நீயும் திருப்தியடைவாய்; உன் மூலம் அநேகர் திருப்தி அடைவார்கள். இன்னும் நாட்கள் இருக்கிறது என்று அசட்டையாயிராதே. இயேசு வருவதை அறிந்த சகேயு உடனே ஓடி, ஏறி, இறங்கி இயேசுவோடு நடந்ததால் இரட்சிப்பின் சகாயத்தை அவனும், அவன் வீட்டாரும் பெற்றுக் கொண்டார்கள். உன்னைத் தேடி வரும் தேவ வார்த்தையை விட்டு விடாதே.

அருமையானவர்களே! நாட்கள் திரும்பாது; காத்திருக்காது. சோதோம் கொமாரா பட்டணத்தார் மனந்திரும்பும்படி நோவாவைக் கொண்டு 120 ஆண்டுகள் எச்சரித்தார். நோவாவும் அவன் குடும்பத்தார் தவிர மனந்திரும்பாத எல்லோரும் அழிக்கப்பட்டார்கள். ஆனால், நினிவே பட்டணத்தாரோ யோனாவின் மூலம் எச்சரிக்கப்பட்டதில் ஒரே நாளில் ராஜா முதற்கொண்டு யாவரும் தங்களைத் தாழ்த்தி பாவமான வழிகளை விட்டு கர்த்தரிடத்தில் திரும்பியதால் லட்சத்து இருபதாயிரம் பேருக்கும் மேலான மக்கள் காக்கப்பட்டார்கள். பெந்தகோஸ்தே நாளில் பேதுரு மூலம் சுவிசேஷத்தைக் கேட்ட மூவாயிரம் பேர் கால தாமதமின்றி உடனே கீழ்ப்படிந்து இரட்சிப்பை பெற்றுக்

கொண்டார்கள். சபை ஆங்காங்கே பெருகியது (ஆதி 6,7; யோனா1-3;அப் 2:1-47)

பிரியமானவர்களே; பிறந்தநாள், திருமண நாள் என்று நினைவில் வைத்து விமர்சையாகக் கொண்டாடுகிறோம். ஆனால், நமது மரண நாள் குறித்து ஏதாவது சிந்தித்தது உண்டா? ஆவியை விடாதிருப்பதற்கு ஆவியின் மேல் ஒரு மனுஷனுக்கும் அதிகாரமில்லை. மரண நாளின் மேலும் அவனுக்கு அதிகாரமில்லை என்பதே நம் நிலை (பிர 8:8). இந்த குறுகிய நாட்களில் நீடித்த, நித்தியமான சமாதானமான நாட்களுக்கு நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். நம் மரணம் குறித்து, கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள் (வெளி 14:13) என்பதையும் கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம், அவர் பார்வைக்கு அருமையானது என்பதையும் புரிந்து தெளிவாய் விசுவாசிப்போமேனால் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவிக்கமாட்டோம். அதற்குப் பதிலாக முதல் இரத்த சாட்சி ஸ்தேவானின் மரணம் போல் கர்த்தருக்குள் மரிக்கும் பாக்கியத்தை சந்தோஷமாய் ஏற்றுக் கொள்வோம். மரண பரியந்தம் உண்மையாய் வாழ்வோம்.

அன்பான விசுவாசிகளே! நாம் கிறிஸ்துவின் வருகையை அறிவோம்: ஆனால், நாட்களை அறியோம். அவர் வரும்பொழுது பரிசுத்தவான்களை தன்னோடு சேர்த்துக்கொண்டு பரலோகில் பிரவேசிப்பார் (I தெச 4:17). இந்த கூட்டத்தில் நாம் இருக்கத்தக்கதாக நாட்களை பிரயோஜனப்படுத்தி பரிசுத்தமாய் வாழ்வோம். கறையற்றவர்களும், பிழையற்றவர்களாய் அவருடைய வருகையில் காணப்படும்படி விழிப்புள்ளவர்களாய், ஜாக்கிரதையாய், ஆயத்தமாயிருப்போம். கர்த்தராகிய இயேசுவே வாரும். ஆமென்.

† 

## வேதாகமமும், புயல் காற்றும்

கொஞ்சநேரத்துக்குள்ளே **யூரோக்கிலிதோன்** என்னுங் கடுங்காற்று அதில்மோதிற்று. (அப் 27:14) கிறிஸ்துவின் சுவிஷேத்தின் நிமித்தம் பவுல் கட்டப்பட்டு இருக்கையில் அவரை இராயனிடம் ஒப்படைக்க கப்பல் பயணத்தில் செல்லுபோது யூரோக்கிலி தோன் என்னும் காற்றில் அகப்பட்டத்தை நாம் அறிவோம். இந்த முறையில் இன்று வரைக்கு கூட கடும் **காற்றுக்கு பெயர் வைக்கும்** முறை கையாளப்பட்டு வருகிறது.

# எபிரெயர் 1 ஆம் அதிகாரம்

**Bro. V. ஆசீர்வாதம்,** சென்னை.

*(சென்ற மாத இதழின் தொடர்ச்சி...)*

**VI. இயேசுவானவர் தம்மாலே தாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணினார்:**

இயேசுவானவர் தாமாக முன்வந்து மனித சமுதாயத்துக்கு பாவ மன்னிப்பை ஏற்படுத்தினார்.

a. யோவா 10:17-18 இயேசுவானவர் தம்முடைய ஜீவனை கொடுக்கவும், அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் தேவனிடத்தில் கட்டளைப் பெற்றிருந்தார்.

b. கலாத். 1:4 தேவனுடைய சித்தத்தின்படி நம்முடைய பாவங்களுக்காக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்.

c. தீத்து 2:14 நமக்காக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்.

d. எபி 10:10 இயேசுகிறிஸ்துவின் சரீரம் தேவ சித்தத்தின்படி சிலுவையில் அறையப்பட்டதினால் அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்த மாக்கப்பட்டோம்.

e. எபி 10:14 பரிசுத்தமாக்கப்படுகிறவைகளை ஒரே பலியினால் பூரணப்படுத்தினார். இவ்வாறு இயேசுவானவர் தாமாக முன்வந்து மனித சமுதாயத்துக்கு இரட்சிப்பை ஏற்படுத்தினார்.

f. IIகொரி 5:18-19 தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல் கிறிஸ்துவுக்குள் உலகத்தை தம்மோடு ஒப்புரவாக்கிக் கொள்ளப் பிரியமாயிருக்கிறார். ஆகையால் ஒப்புரவாக்குதலின் உபதே சத்தையும், ஊழியத்தையும் அப்போஸ்தலரிடத்திலே ஒப்புவித்தார்.

**VII. இயேசுவானவர் எல்லாவற்றையும் நிறைவேற்றி தேவனுடைய வலது பக்கத்திலே உட்கார்ந்தார்:**

a. எபி 1:3 உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார்.

b. எபி 8:1 மகத்துவ சிங்காசனத்தின் வலது பக்கத்திலே உட்கார்ந்தார்.

C. சங் 110:1 தேவனுடைய வலதுபாரிசம் இயேசுவானவருக்கு வாக்களிக்கப்பட்டது.

d. எபி 1:13 அந்த வாக்குத்தத்தத்தை பெற்றுக்கொள்ள அதாவது எபி 12:2ன்படி தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு அதாவது தேவனுடைய வலது பாரிசத்தில் உட்காருதல். இதினிமித்தம் சிலுவையை சகித்து தேவனுடைய வலது பக்கத்தில் உட்கார்ந்தார்.

e. 1பேது 3:22 பரலோகத்துக்குபோய், தேவனுடைய வலது பாரிசத்தில் இருக்கிறார்.

f. அப் 7:55–56 மனுஷ குமாரன் தேவனுடைய வலது பாரிசத்தில் நிற்கிறார்.

g. கொலோ 3:1 தேவனுடைய வலது பக்கத்திலே இருக்கிறார்.

**VIII. இயேசுவானவர் தேவதூதரைக் காட்டிலும் மேலானவர்:**

a. பெரிய நாமத்தை (பெயரை) பெற்றுக்கொண்டார் (எபி 1:4)

1. எபே 1:20 இயேசுவானவர் உலகத்தில் மாத்திரமல்ல பரலோகத்திலும் பெயர் பெற்றிருக்கிற எல்லாரைப் பார்க்கிலும் அதாவது, எல்லா பெயரைப் பார்க்கிலும் இவருடையப் பெயர் உயர்ந்ததாயிருக்கிறது.

2. யோவா 5:43 பிதாவின் நாமத்தினாலே வந்தவர் பிலி 2:10 இயேசுவின் நாமத்தில் வானோர், பூதலத்தோர், பூமியின் கீழான யாவருடைய ழங்கால்கள் முடங்க வேண்டும். ரோமர் 14:11 முழங்கால் யாவும் இயேசுவுக்கு முன்பாக டங்க வேண்டும்.

எபே 5:20 இயேசுவின் நாமத்தில் தேவனை ஸ்தோத்தரிக்க வேண்டும். எபி 13:15 உதடுகளின் கனிகளாகிய ஸ்தோத்திர பலியை இயேசு கிறிஸ்துவின் மூலமாய் தேவனுக்கு செலுத்த வேண்டும்.

அதாவது, ஒரு மனிதன் எங்கிருந்தாலும் அவன், உள்ளத்திலே பேசினாலும் அவன் இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்தும்போது அந்த ஜெபம் வானங்களைக் கிழித்துக்கொண்டு, அந்தகார சக்திகளை ஜெயங்கொண்டு, பரலோகத்திலுள்ள கிருபாசனத்தண்டை தேவ சமூகத்திற்கு வந்து சேரும். இயேசுவின் நாமத்திற்கு அத்தனை மகத்துவமும், வல்லமையும் உண்டு.

b. தேவதூதரைக் காட்டிலும் மேன்மையானவர். இயேசுவானவர் தேவதூதரைக் காட்டிலும் மேன்மை உள்ளவராய் இருக்கிறார். ஏனென்றால், இயேசுவானவர் உலகத்தில் பிரவேசிக்கும் போது, தேவதூதர்கள் அவரைப் பணிந்துக்கொள்ள வேண்டுமென்று கட்டளையிடப்பட்டுள்ளது (எபி 1:6, சங் 97:7). அதாவது, I பேதுரு 3:22 ன்படி, வானத்திலே தேவதூதர்கள் இயேசுவானவருக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும். பூமியிலே எபே.5:24ன்படி சபையானது கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிய வேண்டும். பரலோகத்திலுள்ள தேவதூதர்களுக்கும், பூமியிலுள்ள சபைக்கும் இயேசு தலைவராயிருக்கிறார். அவருடைய சொற்படி கேட்பதுதான், பணிந்துக்கொள்வதாகும்.

## *இயேசு தேவதூதரல்ல!*

ஆங்கிலத்தில் Angel Of God. கர்தருடைய தூதனானவர் (யாத் 3:2; அப். 7:38,30,35 என்று சொல்லப்பட்டிருக்கிறது. தானி. 10:21ல் உன் அதிபதியாகிய மிகாவேல் என்றும், தானி. 12:1ல் என்றும்,

யூதா. 9ல் பிரதான தூதனாகிய மிகாவேல் என்றும் சொல்லப் பட்டிருக்கிறது. ஒருவேளை கர்த்தருடைய தூதனானவர் என்று சொல்லப்பட்டிருப்பது, இந்த மிகாவேலை குறிப்பதாகவும் இருக்கலாம். மேற்சொல்லப்பட்டவைகள் எல்லாம் தேவதூதரையே குறிக்கும்.

**IX. தேவதூதர்கள்:**

a. எபி. 1:7 தேவதூதர்களை காற்றுகளாகவும், அக்கினி ஜூவாலைகளாகவும் செய்கிறார் [யாத். 3:3–5, அப். 7:30].

b. வெளி. 7:1 தேவதூதர்கள் பூமியின் நான்கு திசையின் காற்றுகளையும் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள்.

c. வெளி. 14:14 மேகத்தின் மேல் ஒரு தூதன் உட்கார்ந்துக் கொண்டிருக்கிறான்.

d. வெளி. 14:18 அக்கினியின் மேல் ஒரு தூதனுக்கு அதிகாரண்டு.

e. வெளி. 16:5 தண்ணீர்களின் தூதனாக ஒருவன் இருக்கிறான்.

f. வெளி. 19:17 ஒரு தூதன் சூரியனில் நிற்கிறான்

g. எபி. 1:14 இவைகளைக் சரியாக செய்வதற்கு தேவதூதர்கள் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்கள்.

h. ரோமர் 8:19–22 சிருஷ்டியானது தேவனுடைய பிள்ளைகள் வெளிப் படுவதற்காக காத்துக்கொண்டிருக்கிறது. சிருஷ்டியானது கீழ்ப்படுத்தினவராலே மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது. தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும் என்கிற நம்பிக்கையோடு ஏகமாய் தவித்து பிரசவ வேதனைப்படுகிறது. மேலும், எபி. 1:14ன்படி இரட்சிக்கப்படுகிறவர்களுக்காக, அவர்களை பாதுகாக்கும் ஊழியத்தை செய்யும்படி தேவதூதர்கள் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்கள் அல்லது வேலைக்கார ஆவிகளாயிருக்கிறார்கள். சங். 34:7ன்படி கர்த்தருக்கு பயந்தவர்களை தேவதூதர்கள் சூழ்ந்துக் கொண்டு ஆபத்திலிருந்து விடுவிக்கிறார்கள். மத்.18:10ன்படி, ஒவ்வொருவருக்காக ஒரு தூதன் நியமிக்கப்பட்டு இருக்கிறான் என்று இயேசுவானவர் சொல்கிறார். வெளி. 22:16 ன்படி தேவதூதர்கள் இயேசு கிறிஸ்துவினால் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்கள். இந்த தேவதூதர்களுக்கும் மேலாக இயேசுவானவர் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார் [I பேதுரு. 3:22].

**X. இயேசுவானவர் ஆளுகை செய்கிறவராக அதாவது ராஜாவாக இருக்கிறார்: [சங். 45:6–7, எபி. 1:8]**

குமாரனை நோக்கி தேவனே என்று சொல்லப்பட்டிருப்பதினால், குமாரன் என்பதற்கு தேவனுக்கு அடுத்தபடியானவரும், தேவனே என்பதற்கு தேவதூதர்களுக்கு மேலானவராகவும், தேவத்துவத்தில்

ஒருவராகவும் இருக்கிறார் என்று அர்த்தமாம். ரோமர். 9:5ன்படி இயேசுவானவர் சர்வத்துக்கும் மேலான தேவனாய் இருக்கிறார். அதாவது, இதற்கு பிதாவாகிய தேவனுக்கு மேலானவர் என்று அர்த்தமல்ல. **பிதாவைத்தவிர** மற்ற எல்லாம் இயேசுவானவருக்கு கீழ்ப்பட்டிருக்கிறது (1கொரி. 15:27–28). எபி. 1:8ன்படி உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குள்ளது. உம்முடைய ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாய் இருக்கிறது என்று சொல்லப்பட்டிருப்பதினால் இயேசுவானவர் நல்லாட்சி புரிகிற ராஜாவாக ஆட்சி செய்கிறார். தானி. 2:44ல் அழியாத ராஜ்யம் வாக்களிக்கப்பட்டது. எசேக். 34:23– 24ல் என் தாசனாகிய தாவீது என்னும் ஒரு மேய்ப்பனை அவர்கள் அதிபதியாகவும், எசேக். 37:24–25ல் என் தாசனாகிய தாவீது என்பவர் அவர்கள் மேல் ராஜாவாகவும் இருப்பார். எரேமி. 30:9ல் நான் எழுப்பப்போகிற ராஜாவாகிய தாவீது என்றும், எரேமி. 23:5ல் அந்த தாவீதுக்கு நீதியுள்ள கிளையை எழும்பப்பண்ணுவேன், அவர் ராஜாவாயிருப்பார் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

## இந்த தாவீது யார்?

தாவீது ராஜா இயேசுவுக்கு ஏறக்குறைய கி..1000 ஆண்டுகளுக்கு முன்பாக இஸ்ரவேலை ஆட்சி புரிந்து மரித்தான். எரேமியாவும், எசேக்கியேலும் கி.மு. 600–560க்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவர்கள். உண்மையான தாவீதின் மரணத்திற்குப்பின் ஏறக்குறைய 400 ஆண்டுகளுக்கு பின் இந்த தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டிருப்பதால் முன்னறிவிக்கப்பட்ட அந்த தாவீது யார்? எரேமி. 23:5ன்படி தாவீதின் வம்சத்தில் எழும்புகிறகிளை எனப்படுபவர். சகரியா. 6:12–13ன்படி அந்த கிளை கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டும். தமது சிங்காசனத்தில் ஆளுகை செய்பவராகவும், அதே சிங்காசனத்தில் ஆசாரியராயுமிருப்பார். இவர் யார்? லூக். 1:30–32 இயேசு என்று பெயரிடப்படுகிறவர் தேவனுடைய குமாரனாக இருந்து இஸ்ரவேலை என்றைக்கும் ஆட்சிபுரிவார். அவருடைய தகப்பனாகிய தாவீதின் சிங்காசனம் அவருக்கு கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருப்பதினால் தாவீது எனப் படுகிறவர், தாவீதின் சிங்காசனத்தைப்பெற்றுக்கொள்ளுகிற இயேசு வானவரே ஆவார். அப். 2:30ன்படி கிறிஸ்துவானவர் உயிர்த்தெழுந்ததினாலே தாவீதின் சிங்காசனதிலே உட்கார்ந்தார். ஏசா. 52:7ல் உன் தேவன் ராஜரீகம் பண்ணுகிறார். அதாவது, உன் தேவன் அரசாட்சி செய்கிறார் என்று பிரசங்கிப்பது சுவிசேஷமாகும். இந்த ராஜ்யம் தேவனால் ஸ்தாபிக்கப்பட்ட அழியாத ராஜ்யமாகும்.

தானி. 2ஆம் அதிகாரத்தின்படி, இந்தப் பரலோக ராஜ்யம் ரோம அரசாங்கத்தோடு போர்செய்து, அதை வெற்றிகொள்ள வேண்டும்.


அப்போஸ்தலர்கள் ரோம் சாம்ராஜ்யத்தின் எல்லைக்குள்ளாகவே சபைகளை ஸ்தாபித்தார்கள். ரோம அரசாங்கம் சபைகளை துன்பப்படுத்தியபோது, கிறிஸ்தவர்கள் ரோமப் பேரரசர்களை தலை குனிந்து வணங்காமல், தங்கள் விசுவாசத்தை காத்துக்கொள்ள தங்கள் சரீரங்களை மரணத்துக்கு ஒப்புக்கொடுத்தார்கள். அரசர்களுடைய வீடுகளில் வேலை செய்கிறவர்கள் அரசரை குனிந்து வணங்காமல் தலை நிமிர்ந்து நின்றபோது ஒரு விசிவாசியின் மூலம் பரலோக ராஜ்யம் ரோமர்களை ஜெயங்கொண்டது. இவ்வாறாக இயேசுவானவர் தேவனுடைய குமாரனாக இருக்கிறார், எல்லாவற்றிற்கும் வாரிசு உரிமையுள்ள சுதந்தரவாளியாய் இருக்கிறார், எல்லாவற்றையும் சிருஷ்டித்த சிருஷ்டிகராயிருக்கிறார், தேவனுடைய தன்மையின் சொரூபமாயிருக்கிறார், எல்லாவற்றையும் தமது வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராயிருக்கிறார். தாமாக முன்வந்து பாவ மன்னிப்பை ஏற்படுத்தினவராக இருக்கிறார், தேவ தூதரைப்பார்க்கிலும் மேன்மையுள்ளவராயிருக்கிறார், ஆளுகை செய்கிற ராஜாவாக இருக்கிறார், தேவனுடைய வாக்குத்தத்தத்தின்படி (சங். 110:1) தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் உயர்த்தப்பட்டவராயு இருக்கிறார். இவற்றைப் பார்க்கும்போது, இயேசுவானவர் எவ்வளவு பெரியவராயிருக்கிறார் என்பதைப் புரிந்துக் கொள்ளலாம். ✝

## தெய்வீக இரட்சிப்பு

தெய்வீக இரட்சிப்பின் திட்டத்தைப் பற்றிய சுருக்கமான வார்த்தைகள் நம் ஆண்ட வராகிய இயேசு கிறிஸ்துவின் வாக்கியங்களிலிருந்தே வெளிப்படுத்தப்பட்டன. **விசுவாச முள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்** (மாற்கு 16 : 16 ). இரட்சிப் படைய இதைவிட சுலபமான வழி எதுவும் இருக்க முடியாது. மிக முக்கியமாக மனித மாற்று எதுவும் இதற்கு இணையாகாது ( மத். 7 : 21 – 23 ). மேலும், கிறிஸ்துவின் நியாயாசனத்தை எதிர்கொள்ளாமல், வேறு வழியில், முத்துக்களாலான பரலோக வாசல் வழியாய்ப் பிர வேசித்து, அதன் தங்க வீதிகளில் யாராலும் நடக்க முடியாது (I கொரி. 5 : 10 ; வெளி. 21: 21)

இரட்சிப்பு சம்பந்தமாக யாரும், இப்பூமியிலும், நித்தியத்திலும் தேவனோடு சமரசப் பேச்சுவார்த்தை நடத்த முடியாது. மேலும், நியாயத்தீர்ப்பின் நாளில், **கர்த்தாவே நாங்கள் இவைகளையெல்லாம் உமக்கென்றுதான் செய்தோம். நீர்தான் அவைகளைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை, அதனால் சற்றே காத்திடும்** என்று யாரும் சொல்லமுடியாது.அப்படியே சொன்னாலும், அது எதையும் சாதிக்காது. இரட்சிப்பு சம்பந்தமாக, நமது தவறான தெரிந்துகொள்ளுதலினால் ஏற்படும் நித்திய துயரத்தைத் தவிர்க்க, இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளைக் கவனித்து, அதற்குக் கீழ்ப்படிந்து, மெய்யான தெய்வீக இரட்சிப்பின் திட்டத்தைப் பெற்றிடுங்கள்.


12 வித்தியாசமான தலைப்புகளில் கைப்பிரதிகள் கிடைக்கும்.
தேவைக்கு எங்களைத் தொடர்பு கொள்ளவும்.






















## World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Tuesday 6.30 - 7:00 am

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Friday 7.30 - 8.00 am

Arjunan on Nambikkai TV
TV : On Monday & Saturday 7.30 - 7.45 pm

Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam :
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

Philemon & Kingsley on Tamilan TV and Nambikai TV :
Every Sunday 6:45 - 7:00 am
Every Friday 6.00 - 6.30 am
Joy TV - Saturdays 9.00 pm Salvation TV - Every Sunday 2.00 pm

Joshua & Ricky Gootam In Telugu:
Every Saturday at 6:00 pm Subhavartha Channel
Every Wednesday at 6:30 pm on Rakshana Channel
Every Thursday at 11:00 am on Rakshana Channel
Satyavani T.V. online : www.sakthitv.in
Every Wednesday & Friday at 8.00 pm

For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625016
9244204420 / 21, 0452 - 2607026



**"Registered" with RNI No: TNTAM/2006/20466**
Postal regn. No. Erode/26/2024 - 2026
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2024 - 2026**
Published on 17/18 th of Every Month
Posted at Erode HPO on 20/21 of Every Month.

**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்


## எங்களது இதர வெளியீடுகள்


**தபால் செலவிற்கு பணம் அனுப்பி**
**இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.**




















**வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில்**
**ஒரு புதிய அத்தியாயம்**
- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**
ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.
விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ.எண் 27, காங்கேயம் 638-701. தமிழ்நாடு, இந்தியா.

**To:**

**திருமறை தியானம்**
**நம்பிக்கை TV**
செவ்வாய் – காலை 6:30 – 7:00 மணி
**நம்பிக்கை TV**
வெள்ளி – காலை 7:30 – 8:00 மணி

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.